ரிஜிஸ்டர் நெ. 2041.

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன் பணம்.	— ரூ.	3—0	
6-மாத சந்தா	,,	— ,,	1—12
வெளி நாட்டிற்கு	,,	— ,,	5—0

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
தொடர்ந்து அடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு கார்த்திகை-மீ 26-உ (11—12—1932) | மலர் 33.

விற்பனைக்குத் தயார். புது நூல்கள். விற்பனைக்குத் தயார்.

தோழர். ம. சிங்காரவேலு பி.ஏ., பி.எல்.,

அவர்கள் எழுதிய

"கடவுளும் பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர் சிறந்த நூல். பகுத்தறிவு வளர்ச்சியும், உலக முற்போக்குமடைந்துள்ள இக்காலை, அஞ்ஞானத்திலும், மூடபக்தியிலும் கிடந்துழலும் நம் மக்கள் அவசியம் படித்துப் பயன்பெறவேண்டுமென்றே கூறுவோம். "கடவுள்" என்னும் வார்த்தை வெறும் சொல் மயக்கே யொழிய வேறில்லை என்பதையும், புராணக்காரர்கள் கடவுளைக் கற்பித்திருக்கும் பொய்யுரைகளையும், தத்துவ நூலாசிரியர்கள் கடவுளைப்பற்றிக் கூறும் கற்பனைகளையும் விஞ்ஞான முகத்தால் ஆராய்ந்து, அவைகள் யாவும் கற்பனைகள் என்பதைத் தெள்ளிதில் விளக்கப்பட்டுளது. "கோழி முதலில் உண்டானதா முட்டை முதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்து கொள்ளுங்கள்.

சுமார் 80 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணா 0—4—0

தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபால்தலைகள் அனுப்பவேண்டும்.

மானேஜர்,

குடி அரசு புக்டிபோ, ஈரோடு.

Dr, R. M. Shastry's

Ayurvedic Golden Tonic.

(Registered by the Government of India)

"பல டாக்டர்களின் நன்மதிப்புப்பெற்றது."

உத்திரவாதமுள்ளது உடனே பரீட்சித்துப்பாருங்கள்.

மேல்கண்ட கோல்டன் டாணிக்கு தன் குறைந்த மதிப்பு (விலை விலையு)டன், உயர்த்தி விற்கப்படும் இதர ஆயுர்வேத ஔஷதங்களைப் பந்தயத்திற்கு அழைக்கிறதென்றால்! இதன் குண சிரேஷ்டத்தைப்பற்றி இன்னும் எவ்வளவுதூரம் புகழ்ந்தெழுதுவது:—

உண்மையில்—இரத்தசுத்தி, இரத்தவிர்த்தி, தேகபலம், தேகபுஷ்டி, மனோதிடம், தாதுவிர்த்தி, முகவசீகரம் முதலிய பல நன்மைகளை அடைய விரும்பும் ஆண், பெண் எல்லா வயதோரும் இதை கட்டாயம் ஒரு தடவையாகிலும் உபயோகிக்கும்படி சிபார்சு செய்கிறோம்.

இதனால்—பாண்டு, காமாலை, கை கால் எரிதல், வாய்ப்புண், வாய்நாற்றம், குலைநோய், இருதய அதர்ச்சி, கை கால் வலி, அல்லது சோர்வுண்டாதல், இடுப்புநோய், மூத்திரத்தோடு தாது போதல், மூத்திரம் பலவித நிறங்களாகவும் அடிக்கடிப்போதல், மலபந்தம், மலத்தோடு சீழ் அல்லது ரத்தம் போதல், பசியின்மை, பலவித சிரங்குகள், உன்மத்தம், சோம்பல், நாள்பட்ட சுரம் முதலிய பல ரோகங்களை நிவர்த்திப்பதோடும், ஸ்திரிகளுக்கு மாத—ருதுகாலங்களில் உண்டாகும தலைவலி, கழுத்திழுப்பு, தலை சுற்றல், வயிற்றுவலி மூட்டுகளின் வீக்கம், அகால மாதருது முதலிய பல கேடுகளை உண்மையில் நிவர்த்திப்பதில் நிரம்பவும் அனுபவப்பட்டது.

மற்றும்—உட்காச்சலாய் (கணைச்சூடு) தசைப்பற்றுக்குறைந்து நாளுக்கு நாள் மெலிந்து இளைத்துப்போகும் மாணவர்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தேக புஷ்டியையும், ஆத்ம சக்தியையும், மூளைக்குப் பலத்தையும் கொடுப்பதில் இது சஞ்சீவிக்கு ஒப்பானது.

15-வயதுக்கு கீழ்ப்பட்டவர்கள் ஒரு புட்டி டாணிக்கும், மேற்பட்டவர்கள் இரண்டு புட்டி டாணிக்கும் சாப்பிடவேண்டும்.

12 அவுன்ஸ் புட்டி 1-க்கு ரூபா 1—8—0, வி. பி. சிலவு அணா 15, இரண்டு புட்டிக்கு வி. பி. சிலவு ரூ 1—7—0.

விலாசம்:— Dr. R. M. Shastry
Ayurvedic Golden Tonic Pharmacy.
Post-Rakah Mines
Singhbum Dist. (N. India.)

Read.

The 'Citizen'

and become a
True Citizen

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—
The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனன்.

வருஷ சந்தா—2—8—0

விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.

"குடி அரசு"

கிடைக்குமிடங்கள்.

தஞ்சாவூர்.
மணியம் பிரதர்ஸ்,
ரயில்வே ஸ்டேஷன் ரோடு.

பாபநாசம். அப்துல்ரசாக் சாயபு,
இரும்புவியாபாரம்.

காஞ்சீபுரம். எம். கே. எல்லப்பன்,
திருப்புக்குடல் வீதி,

கோயமுத்தூர்.
வி. ரங்கராஜுலு, நியூஸ்
ஏஜண்ட், ராஜவீதி.

சேலம். சித்தய்யா,
தனலட்சுமி விலாஸ் பேங்க்,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மதுரையில்
குடி அரசு கிடைக்குமிடம்.
எம். முத்துசாமி
ஜெனரல் நியூஸ் ஏஜன்சி
கீழவெளிவீதி மதுரை.

உங்கள்

கண்ணையும் காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

பூவிழல்!!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை ஆபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் நிச்சயமாக குணப்படுத்தி விடுவோம்.

செவிடு!!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அக்கரையில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்றுதுண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்

குஷ்டம்

வெண்குஷ்டம் - பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய இஞ்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம். வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

மதத்தைப்பற்றி லெனின் எழுதியது.

1-ம் அத்தியாயம்.

சமதர்மமும் சமயமும்.

(Socialism and Religion)

[S. R. & E. V. R. மொழிபெயர்ப்பு]

வாழ்க்கைத்திட்டம்.

உலக மக்களின் தற்காலத்திய சமூக வாழ்க்கைத் திட்டமானது (சரீரத்தினால் பாடுபட்டுத்) தொழில் செய்துவாழும் பெருவாரியான மக்களை, (சரீரத்தினால் பாடுபடாத ஜமீன்தார், மிராசுதார், முதலாளிமார், குருமார், புரோகிதர், மேல் ஜாதியார், அரசர் என்று கூறப்படும்) ஒரு சிறு கூட்டத்தார் தங்கள் சுயநலத்திற்காக அடக்கி யொடுக்கி ஆண்டு பயன் பெற்றுவரும் முறையையே அஸ்திவாரமாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கிறது. இச்சிறு சுயநலக்கூட்டத்தார்கள் தான் உலகின் ஸ்தாவர சங்கமச்சொத்துக்களாகிய, நிலம், பொருள் முதலியவற்றிற்குச்சொந்தக்காரர்களாய் இருந்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட திட்டத்தை ஒப்புக்கொண்டு வாழ்க்கை நடத்திவரும் மக்கள் அடிமைச் சமூகமக்களாகும்.

ஏனெனில் தொழிலாளிகள் (அதாவது சரீரத்தினால் பாடுபடுகிறவர்கள்) தங்கள் வாழ் நாள் முழுவதும் மிராசுதார்களுக்கும், முதலாளிகளுக்கும் (அதாவது பூமிக்குச்சொந்தக்காரர் என்பவர்களுக்கும்) உழைக்கவே தாங்கள் பிறந்ததாகக்கருதி, அவ்வாறுழைக்கத்தங்களுடைய சரீரத்தில் சக்தியும், ஆயுளும் இருப்பதற்காகவேண்டி, தங்களுடைய ஆகாரத்திற்கு எவ்வளவு வேண்டுமோ அவ்வளவு மாத்திரம், மிராசுதார்களிடமிருந்தும், முதலாளிகளிடமிருந்தும் பெற்றுக்கொண்டு, தாங்கள் என்றும் அடிமையாகவே இருக்கும் வண்ணம் தங்களது வாழ்க்கையை நிர்ணயித்துக்கொண்டு வாழ்ந்து வருகிறார்கள். தொழிலாளிகள் அனுபவிக்கும் இம்மாதிரியான பொருளாதாரக்கொடுமையின் பயனானது அவர்களுக்கு, அவர்கள் அரசியல் துறையில் சிறிதும் சுதந்திரமில்லாமல் அடிமைத்தன்மையை ஏற்படுத்தியதோடு, சமூகத்துறையிலும் கேவலமான தாழ்ந்த நிலைமையையே கொடுத்திருக்கின்றது. இதனால் தான் தொழிலாளிகள் (சரீரத்தினால் பாடுபட்டு உழைப்பவர்கள்) மனிதத்தன்மை அற்றவர்களாகவும், சமூக வாழ்க்கைக்கு வேண்டிய ஒழுக்க முறைகளில், லக்ஷ்ய மற்றவர்களாகவும் இருக்கவேண்டியவர்களாகிறார்கள்.

தொழிலாளிகள் தாங்கள் அனுபவிக்கும் பொருளாதாரக்கொடுமையை நீக்கிக்கொள்வதற்காக அரசியல் துறையில் தங்களுக்குச் சுதந்திரம் வேண்டுமென்று பாடுபட்டுக் கொஞ்சமாகவோ, அல்லது அதிகமாகவோ சில அரசியல் சுதந்திரங்களைப் பெற்றுவிட்டாலும்கூட, உலகில் முதலாளித்தத்துவம்வலுவாய் இருக்கும் வரையிலும் அச்சுதந்திரங்களால் தொழிலாளிகளுக்கு யாதொரு பயனும் ஏற்படப் போவதில்லை. அதாவது தங்களுக்கு ஏற்பட்ட கொடுமையையும், தாழ்ந்த நிலையையும் போக்கிக்கொள்ள முடியவே முடியாது.

மதம் (சமயம்)

மதம் என்பது பிறருக்கு உழைத்து வருமைப்பட்டு, தாழ்த்தப்பட்டு, அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்களை உற்பத்திசெய்யவும், அவர்களை விடுதலையடைய வொட்டாமலும், தலையெடுக்க வொட்டாமலும், அழுத்திவைக்கவும் ஏற்பட்ட சாதனங்களில் மிக முக்கியமான தொன்றாகும்.

ஆதிகாலத்தில் காட்டில் அலைந்துதிரிந்துவாழ்க்கை நடத்தியமக்கள்தங்களின்சாதாரண புத்தியால அறிந்துகொள்ள முடியாதிருந்த இயற்கைக்காட்சிகளையும், அதன் அற்புதச் செயல்களையும், கடவுளென்றும், பேயென்றும், தெய்வீகச் செயலென்றும், ஆண்டவனின் அருளென்றும், அற்புதமென்றும் எப்படி நம்ப நேர்ந்ததோ அதே போன்று மதத்தினால் தற்காலத்தில் தொழிலாளிகள், தங்களை ஏய்த்து அடக்கியொடுக்கி ஆண்டு கொடுமைப்படுத்தும் முதலாளி வர்க்கத்தினர்களின் கொடுமையினின்று மீள்வதற்குச் சற்றும் வகைதேடாமல் இது கடவுள் செயலென்றும், தங்கள் தலைவிதியென்றும் முற்பிறப்பில் தாங்கள் செய்த கர்மத்தின் பலனென்றும் எண்ணிக்கொள்வதோடல்லாமல் இப்பிறப்பில் தம் அறியாமையால் ஏற்பட்டுள்ள கஷ்டங்களையும், பணக்காரவர்க்கம் மனித ஜீவ அபிமானமற்று தமக்கியற்றும் கொடுமைகளையும் பொறுமையோடு சகித்துவந்தால் அதற்கு வெகுமதியாக அடுத்த பிறப்பில் அல்லது வேறு உலகில் நற்கதியடையலாம், நலம்பெறலாமென்று எண்ணித் தங்களைத்தாங்களே சமாதானஞ் செய்து கொண்டு விடுதலை பெற எவ்வித முயற்சியும் புரியாதிருக்க நேருகின்றது.

மத உபதேசம்.

ஏனெனில் பாடுபட்டுழைக்கும் மக்களுக்கு மதம் உபதேசிப்பதென்னவென்றால்

"வாழ் நாள் முழுதும் வருமையினாலும், அன்னியர் கொடுமையினாலும், துன்பப்படுகிறவர்கள் தங்கள் துன்பத்தை அமரிக்கையாகப் பொருத்துக்கொண்டிருந்தால் அவர்கள் காட்டும் பொறுமைக்குத் தகுந்தவாறே அடுத்த பிறப்பில்—அல்லது மேலுலகில் பொன்றாத இன்பவாழ்வை (நற்கதியை) பெறுவார்கள்" என்ற நம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் புகுத்துவதேயாகும். பிறருடைய உழைப்பால் செல்வத்தைப் பெருக்கிப் பிழைக்கும் வஞ்சக முதலாளி கூட்டத்தார்க்கு மதம் உபதேசிப்பதென்னவென்றால்,

"செல்வவான்கள் (ஏழைத்தொழிலாளிகள் தங்கள் உழைப்பிற்குத் தகுந்தபலனையடையவிடாது, அவர்களுக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய பலனை இப்பொழுதுள்ள முதலாளிகளின் அரசாங்கச்சட்டமாகிய கொடும்முறையால் கொள்ளையடித்து) பலவகைகளிலும் பொருள் சம்பாதித்து அனுபவித்துவரும் தங்கள் செல்வத்தில் ஒரு சிறுபாகத்தை (கோவிலென்றும், குளமென்றும், சத்திரமென்றும் சாவடியென்றும் செலவு செய்வதோடு, குருமார்களுக்கும், புரோகிதர்களுக்கும், பிராமணர்களுக்கும்" ஊரார் உழைப்பில் வாழ்ந்திருக்கும் சோம்பேறிகளுக்கும்) தானதர்மம் செய்து விட்டால் அதுவே அவர்கள் பொருள் திரட்டுவதற்கும், வேறு பலவற்றிற்கும் செய்த கொடுமைகளுக்குத்தக்க பரிகாரமாகும்" என்பதுவாகும் இக்கொள்கையானது(மிராசுதார், முதலாளிமார் முதலியோர்கள் மற்றவர்களை வாட்டி வதைத்து வஞ்சித்து ஏமாற்றிக் கொள்ளை அடிப்பதை சரியென்று ஒப்புக்கொள்வதோடு) அவர்கள் 'மோக்ஷலோகம்' போவதற்கு வெகுசுலபமானகிரயத்தில் "அனுமதிச்சீட்டு" (டிக்கட்டு) கிடைத்துவிடும் என்கின்ற நம்பிக்கையை மக்களுக்குப் புகுத்துவதுமாகும்.

மதம் என்பது ஒரு போதைப் பொருளுக்குச் சமமானது. "அதாவது அபினுக்குச் சமமானது" என்று அறிஞர் மார்கஸ் மொழிந்துள்ளார்.

மேலும் "முதலாளித்துவத்தில் அடிமைப்பட்ட மக்கள் தங்கள் மனிதத்தன்மையை முற்றும் மறந்து, நாகரிகமான வாழ்க்கை நடத்தவேண்டுமென்ற எண்ணம் சிறிதுமின்றி உழலச் செய்யும் வழியே சமயமாகும்"(மதமாகும்) என்றும் கூறியுள்ளார்.

அடிமை நிலைஅறிந்த தொழிலாளி.

ஒரு அடிமை தான் பிறரால் அடிமைப்படுத்தப்பட்ட அடிமையென்ற உண்மையை உணர்ந்து தனது விடுதலைக்குப் போராட எத்தனிப்பானேயானால் அப்பொழுதே அவனது அடிமைத்தனத்தில் பாதி மறைந்து விடும். தற்காலத்தில் தங்களுடைய அடிமை நிலையை அறிந்த தொழிலாளிகள் பெரியதொழிற்சாலைகளின் நடுவில் வளர்ந்து வந்ததின் பயனாகவும், பட்டின வாழ்க்கையின் பயனாகவும், அறிவு வளர்ச்சிபெற்று மதத்தின் பெயரால் ஏற்பட்ட பல மூடக்கொள்கைகளை அலக்ஷியமென்று எண்ண வேண்டியவர்களாகிறார்கள். பரலோகத்தைப்பற்றியகவலை பாதிரிகள், முல்லாக்கள், பார்ப்பனர்கள், குருமார்கள் ஆகியவர்களுக்கும், கபடவேடதாரிகளான முதலாளிகளுக்குமே விட்டுவிட வேண்டியவர்களாகின்றார்கள். ஒரு அறிவுள்ள தொழிலாளியானவன் இவ்வுலகில் தனது வாழ்க்கை மேன்மையடைய வேண்டுமென அதுதான்கருதுவான்.

தற்காலத்தில் தொழிலாளிகள் சமதர்மக்கட்சியை (சோஷியலிஸ்ட்பார்ட்டியை) சேர்ந்தவர்கள். சமதர்மமானது விஞ்ஞான (சயின்ஸ்) வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு மதம் என்ற பேரிருளையகற்றுகிறது. அதன் மூலம் தொழிலாளிகள் இறந்த பின்னர் நிகழப்போகும் வாழ்க்கையில் நம்பிக்கை கொள்ளாத

துறந்து விட்டு இந்நிலவுலகில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமை நிறைந்த வாழ்க்கையினின்று மீள்வதற்காகப் போராடுவார்கள்.

மதம் அவரவர்களுடைய சொந்த விஷயம்.

"மதம் என்பது அவரவர்களின் சொந்த விஷயம்" இதுவே மதத்தைப்பற்றி சமதர்மவாதிகளின் (சோஷியலிஸ்ட்ஸ்) அபிப்பிராயமாகும். ஆனால் இறந்துபட்ட வார்த்தைகளைப்பற்றி தப்பர்த்தம் செய்து கொள்ளாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது அவசியமாகும். அரசாங்கம் சம்மந்தப்பட்ட வரையில் மதத்தை அவரவர்களுடைய சொந்த விஷயமாகப் பாவிக்க வேண்டுமென்று சொல்லுகின்றோமேயல்லாமல், நம் சமதர்மக் கட்சியார் சம்மந்தப்பட்டவரையில் நம் அங்கத்தினர்களுக்கு மதத்தை அவரவர்களுடைய சொந்த விஷயமாக விட்டுவிட முடியாது.

அரசாங்கமும், மதமும்.

அரசாங்கம் மதத்தோடு சம்மந்தம் வைத்துக் கொள்ள இடம் கொடுக்கக்கூடாது. மதத்தைச் சேர்ந்த ஸ்தாபனங்களை அரசாங்கத்துடன் சம்பந்தப்படவும்விடக்கூடாது. ஒவ்வொருவருக்கும் அவரவர் இஷ்டப்படி எதாவது ஒரு மதத்தைச் சேரவோ அல்லது தாராளமாய் சமதர்ம வாதிகள் மாதிரி மதமே கூடாது என்றோ நிரீச்சுரவாதிஎன்றோ வாழச் சுதந்திரமிருக்கவேண்டும். மதத்தின் காரணமாய் எந்த உரிமையுள்ளவருக்கும் ஏற்படுத்தவிடக்கூடாது. உத்தியோக முறையில் அரசாங்கத்தாரால் ஏற்படுத்தப்படும் ஆதாரங்களில் எவருடைய மதத்தைப்பற்றியும் எதுவும் காணக் கூடாது. எந்தக்கோவிலுக்கும், எந்த சமயஸ்தாபனத்திற்கும் அரசாங்கத்திலிருந்து மோகினித்தொகை (தஸ்திக் தொகை) யோ, வேறு நன்கொடை (கிராண்டு) முதலிய உதவியோ கொடுக்கக் கூடாது மதஸ்தாபனங்கள் அரசாங்கத்துடன் எந்தவித சம்பந்தமுமில்லாமல் அவரவருடைய சொந்த தனிச்சங்கங்களாகவே இருக்க வேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகள் அமுலுக்குக் கொண்டு வந்தால்தான் பொது மக்கள் மதஸ்தாபனங்களுக்கு அடக்கம் என்றும், மதஸ்தாபனங்கள், அரசாங்கத்திற்கு அடக்கம் என்றும் ஒன்றுக்கொன்று பிணைந்திருக்கும் பழமையான நிலைமைகள் மாறும். பிறகு தான் தற்காலத்தில் அநுஷ்டானத்தில் இருந்து கொண்டு மனித சுதந்திரத்தைப் பாதிக்கும்படியான அநாகரிக வாழ்க்கை முறைகளை—அதற்காதாரமான சட்டங்களை ஒழிக்க முடியும். சட்டத்தின் மூலம் ஒரு மதக்கொள்கைகளின்படி நடப்பதற்கும், நடக்காமல் இருப்பதற்கும் தடைகள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்விதச் சட்டங்களால்மனச்சாட்சியைஅவமதித்து மதத்தினால் ஏற்பட்ட மூடக்கொள்கைகளைப் பரப்புபவர்களுக்கே உத்தியோகமும், ஊதியமும் வெகுமதிகளாக அளிக்கப்பட்டன. மதஸ்தாபனம்வேறு, அரசாங்கம்வேறு என்று பிரிப்பதே சமதர்மவாதிகளின் (சோஷியலிஸ்டின்) முக்கிய கோரிக்கையாகும்.

ருஷியப்புரட்சி.

ருஷிய தேசத்திய புரட்சியில் மேற்கண்ட இக்கோரிக்கையை ஈடேற்றுவதே அரசியல் விடுதலையின் முதற்படியாகக் கருதவேண்டும்; இதற்குச் சாதகமான நிலைமை ருஷியப் புரட்சியால் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் ருஷியப் பாதிரிகள் கூட ருஷியப்பிரபுக்களின் வெறுக்கத்தக்க எதேச்சாதிகாரத்தை எதிர்க்கத்தலைப்பட்டு விட்டார்கள். ருஷியப்பாதிரிகள் அறியாமையாலும், அச்சத்தாலும் பீடிக்கப்பட்டிருந்த போதிலும் கூட பிரபுக்களின் ஆட்சி வீழ்ச்சியடைகின்றது என்பதைக்கண்டு கொண்டு பொது மக்களின் சுதந்திர எழுச்சியை ஆதரிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். அதிகாரிகளின் கொடுமைகளைக் கண்டிக்கவும். போலீஸ்காரர்கள்— "கடவுளின் வேலைக்காரர்களாகிய" தங்களைக் கூட அவமதிப்பாய் நடத்துவதை எதிர்க்கவும் ஆரம்பித்துவிட்டார்கள்.

சமதர்மக் கட்சிக்காரர்கள் இந்த இயக்கத்தை ஆதரித்துப் பாதிரிமாரின் கோரிக்கைகளின் உண்மையான முடிவுக்கு அவர்களைக் கொண்டுபோகவேண்டும். போலீஸ்காரர்களின் அக்கிரமத்துக்குப் பயந்து, இப்போது பாதிரிகள் கூச்சல்போடுகிறார்கள். அக்கூச்சலை நாம் பயன்படுத்திக் கொண்டு அதிற்கலந்து போலீசாருக்கும், மதத்திற்கும் என்றென்றைக்கும் சம்மந்தமில்லாமல் இருக்கும்படி செய்துவிடவேண்டியதோடு, அப்பாதிரிகளிடம் நாம் சொல்லவேண்டியதென்னவென்றால்,

மதம்வேறு, கல்விவேறு.

"ஓ பாதிரிமார்களே! "உங்களுடைய வார்த்தைகளில் உண்மை இருக்குமானால் நீங்கள், மதஸ்தாபனம் வேறு, அரசாங்கம் வேறு என்பதாகப் பிரித்துவிடவேண்டும். பாடசாலைகளுக்கும், மதஸ்தாபனங்களுக்கும்கூட எவ்வித சம்மந்தமுமில்லாமல் பிரித்துவிடவேண்டும். மதம் என்பது மனிதனுக்கு தனிமையில் சொந்தமான விஷயமென்று தீர்மானிக்க முழுமனதுடனும் திடமாகவும் ஒப்புக்கொள்ளவேண்டும். நீங்கள் சொல்லளவில் சொல்லும் சுதந்திரத்தின் உண்மையான இந்தக்கொள்கைகளை, முடிவுகளை நீங்கள் ஒப்புக்கொள்ள மறுத்தால், அவ்வாறு மறுப்பதின் பொருள், பழய கொடுமைகளுக்கு நீங்கள் இன்னும் அடிமைப்பட்டிருக்கிறீர்கள் என்பதும், அரசாங்கத்தின் உத்தியோகத்திற்கும், ஊதியத்திற்கும் நீங்கள் இன்னும் ஆசைப்படுகிறீர்கள் என்பதும், நீங்கள் தற்சமயம் உபயோகப்படுத்தும் உண்மைச் சக்தியில் நம்பிக்கை வைக்கவில்லையென்பதும், நீங்கள் அரசாங்கத்தாரிடமிருந்து கைக்கூலி (லஞ்சம்) வாங்க இன்னும் ஆசை வைத்திருக்கிறீர்கள் என்பதுமாகும். இந்த அருத்தம் மெய்யானால் சுயஅறிவு பெற்று விளங்கும் ருஷியத்தொழிலாளர்கள் உங்களை ஒழிப்பதற்கு யுத்தம் தொடங்குவார்கள்" என்பதாகக் கண்டிப்பாய்த் தெரிவித்துவிடவேண்டும்.

கட்சிகொள்கை.

நிற்க தொழிலாளர்களின் சமதர்ம (சோஷியலிஸ்ட்) கட்சியைப்பொருத்த வரையில் மதத்தை எவருடைய சொந்த விஷயமாகவும் பாவிக்க முடியாது. நம்முடைய கட்சியானது தொழிலாளர் கட்சியேயாகும். அன்றியும், விடுதலைக்குப் போராடும் சுய அறிவு (சுயமரியாதைஉணர்ச்சி) பெற்ற முற்போக்காளர்களுடைய சங்கமுமாகும். இப்படிப்பட்ட சங்கத்தார் மத நம்பிக்கை என்னும் அறியாமைக்கும் அந்தகாரத்திற்கும் இடம் கொடுக்க முடியாது. அரசாங்கத்தையும் மதஸ்தாபனங்களையும் வேறுவேறாகப்பிரிக்க நாம் கோருவதின் காரணம், மக்களின் அறிவைப் பத்திரிகைகளாலும், பிரசங்கங்களாலும் பெருக்குவதின் மூலம் மதம் என்னும் இருளை அகற்றிவிடலாம் என்னும் எண்ணமேயாகும். நமது ருஷிய சமதர்ம (சோஷியலிஸ்ட்) கட்சியின் நோக்கங்களின்முக்கியமானதுமதத்தின் பெயரால் தொழிலாளர்கள்ஏமாற்றப்படுவதைத் தடுத்துப்போர்புரிவதாகும். ஆகையால் நம்மைப்

கொழும்பில் ஈ. வெ. இராமசாமிக்கு வரவேற்பளித்த பொதுக்கூட்டக்காட்சி. பதினாயிரம் பேர் கூட்டம்.

("தினகரன்" பிரஸ் போட்டோ.)

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

ரோஜா முத்தையா

வருமைக்கு மருந்து

நிலங்களைச் சமமாக பங்கிட வேண்டும்.

இலங்கையைச் சேர்ந்த கண்டியில் நவம்பர் மீ முதல் வாரத்தில்க்கூடிய தொழிலாளர் ஐக்கிய சங்கத்தின் நாலாவது வருஷாந்திரக்கூட்டம் கண்டி மைதானத்தில் கூட்டப்பட்ட சமயம் இலங்கையில் பிரபல செல்வந்தரும், பெருநிலமுடையவரும், அரசாங்க சபை அங்கத்தினருமான ஆனரபிள் பண்டார நாயக் அவர்கள் இலங்கையில் உள்ள மக்களைப் பிடித்து இருக்கும் ஏழ்மை என்பதைப்பற்றிப் பேசுகையில்,

"வேலை இல்லாமை காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் பட்டினியால் வருந்துகின்றனர், எத்தனையோ பேர் குடி இருக்க வீடு இன்றி தெருக்களில் அலைந்துதிரிகின்றனர்.

பிச்சை எடுப்பதற்கும் இது காலமல்ல. தற்போதைய கஷ்ட நிலைமையை சீர் படுத்துவதற்கு ஒரே ஒரு வழிதானுண்டு. அதென்னவென்றால் அபேதவாத (சமதர்மக் கொள்கையைக் கடைபிடித்து நிலங்களை ஜனங்கள் யாவருக்கும் சரி சமமாக பங்கிட்டுக் கொடுப்பதேயாகும்.

சொற்பத் தொகையுள்ள செல்வவான்கள் ஏராளமான நிலத்தை தன் வசப்படுத்திக் கொண்டிருப்பது சரியல்ல.

நிலங்களையெல்லாம் மக்கள் யாவருக்கும் சமமாகப் பங்கிட்டுக் கொடுத்துவிடுவோமாயின் வருமை என்பது தொலைந்து விடும்.

இம்முறைக்கு உதாரணமாக ரஷ்யாவை உங்களுக்கு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். உலகத்தில் ரஷ்யா தேசமானது அதிதீவிரமாக முன்னேறிக்கொண்டு வருகின்றது. அத்தேசத்தில் அபேதவாதக் கொள்கை பின்பற்றப் படுகிறது என்று பேசினார்.

"தினகரன்"

மக்களின் மடமையே மாமாங்கமாகும்.

சேலம் சுயமரியாதைப் பொதுக் கூட்டம்.

சேலம் சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் சுயமரியாதைப் பார்க்கில் 4.12-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-மணிக்கு உலகண்டாபுரம், எஸ். ராமநாதன் அவர்கள் தலைமையில் "கடவுள் உணர்ச்சியும், மத உணர்ச்சியும். என்ற விஷயத்தைப் பற்றி தோழர்கள் எ. சித்தையா, அமிர்தலிங்கம், மருதாசலம், கந்தசாமி முதலியவர்கள் விளக்கமாகவும், விரிவாகவும் சொற்பொழிவு ஆற்றினார்கள். பின் தலைவர் முடிவுரையில் இனி மக்களுக்கு "மதமும்" 'கடவுளும்" வேண்டிய அவசியம் இல்லை என்பதுபற்றித் தெளிவாக விளக்கிப் பேசியபின் கூட்டம் வந்தனோபசாரத்தோடு 8-30 மணிக்குக் கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

உண்மையை உணரவேண்டுமா? அப்படியானால்

இந்தியாவின் குறைபாடுகள்.

The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.

இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கத்தில் மந்திரியாய் இருந்த Dr. பாரஞ்சிபே M. A. D. Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அநுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் 1. இந்தியாவின் கல்வி, 2. மதம், 3. வகுப்பு போராட்டம், 4. மதபுத்தகங்கள், 5. மதபுத்தகங்களிலுள்ள குற்றங்கள், 6. பகுத்தறிவும் மதமும், 7. மரணத்தின் மர்மம், 8. மதமும் ஒழுக்கமும், 9. சோதிடமும் சகுனமும், முதலிய தலைப்புகொண்ட அத்தியாயங்களும், ஆழ்ந்த கருத்துக் கொண்ட முகவுரை, முடிவுரை ஆகியவைகளும் கொண்ட 160-பக்கம் உள்ள பெரிய புஸ்தகம். இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் எழுதப்பட்டதாகும்.

இதன் விலை அணா ... ... 0—8—0

குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

படைப்பின் உண்மை.

கடவுளா? இயற்கையா? என்னும் ஆராய்ச்சி.

[N. கணேசமூர்த்தி B. Sc.]

இந்து மதத்திலும், மற்றமதங்களிலும் உள்ள பல கடவுள்களில் படைக்கும் கடவுள் என்று ஒரு கடவுள் உண்டு. இக்கடவுளின் தொழில் இவ்வுலகிலுள்ள பல கோடி ஜீவராசிகளையும் படைப்பது என்று சொல்லுகிறார்கள். மதப்புராணங்களில் இக்கடவுளைப் பற்றியும், இவ்வுலக உற்பத்தியைப் பற்றியும், அதில் உள்ள ஜீவராசிகளின் சிருஷ்டியைப்பற்றியும், இவைகளுக்குள்ள சம்பந்தாசம்பந்தங்களைப் பற்றியும் சொல்லியிருக்கும் கதைகளுக்கு கணக்கு வழக்கு இல்லை.

இந்து மத நூல்களில் "நைமிசாரண்ய முனிவர்கள்" சொல்லியிருக்கும் கதைகள் ஒன்று இரண்டு அல்ல. விலாப்புடைக்க உண்டுவிட்டு, அழகிய மரங்களின் கீழ் சுகபோகிகளாக உட்கார்ந்து கொண்டு கதைகளுக்கு தலையும் இல்லை காலும் இல்லை என்பதற்கிணங்க, பாமர ஜனங்களை ஏமாற்றி "கடவுள் உலகத்தை படைத்தார். அதில் உள்ள ஜீவராசிகளையும் படைத்தார். சிலர் பிரம்மாவின் தலையிலிருந்து வந்தனர். மற்றவர்கள் காலிலிருந்து வந்தார்கள்" என்பதோடு மட்டும் நில்லாமல் "தலையிலிருந்து வந்தவன் பெரியவன் காலிலிருந்து வந்தவன் சிறியவன்" என்று சொல்லி மண்டைகிழிய சண்டையிட்டு கடவுளின் பெயரையும், மதத்தின் பெயரையும் ஜனசமூகத்தின் பெயரையும் கெடுத்து வந்தார்கள்.

இந்து மத நூல்களில் மட்டுமல்ல, இவ்வுலகிலுள்ள சகல மத நூல்களிலும் வேடிக்கையாக வாய்க்கு வந்தபடியெல்லாம் கதைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணமாக பைபிளிலும், மில்டன் கவி எழுதிய "இழந்த மோக்ஷம்" என்னும் புத்தகத்திலும் இப்பூவுலகில் உள்ள ஜீவராசிகள் எப்படி உண்டாயின என்று தெளிவாக, தங்கு தடையில்லாமல் கலப்பற்ற ஓர் பொய் சொல்லப்பட்டிருக்கிறது. இப்பொழுதுள்ள தாவரங்கள், மிருகங்கள், மானிடர்கள் இவைகளெல்லாம் ஜோடிஜோடியாக உண்டாயினவாம். இப்படியாகத்தான் கடவுள் இவைகளைப் படைத்தாராம். இக்கதைகளை வேடிக்கைகளுக்காக எழுதினார்களோ அல்லது மெய்யென்று எழுதினார்களோ தெரியாது.

நாகரீகமும், ஆராயும் தன்மையும் பரவாத பொழுது, ஒரு கூட்டத்தினர் மற்றொரு கூட்டத்தினரை எப்பொழுது அடிமை கொள்ள முயற்சித்தனரோ, எப்பொழுது ஒருசாரார் மற்றொருவரை ஏமாற்றி கைவசம் கண்டனரோ, அப்பொழுது இத்தகைய கதைகள் அவர்களுக்குத்தக்க சாதகமாகவும், கருவியாகவும் இருந்தன.

இவ்வுலகில் பலகோடி ஜீவராசிகளைக் காண்கின்றோம். ஒன்று மற்றொன்றைப் போல் இல்லை. இவைகள் எப்படி உண்டாயின? இவைகளின் சரித்திரம் என்ன? இவைகள் திடீரென்று உண்டாயினவா? பிரம்மாவாவது அல்லது வேறெந்த கடவுளாவது இவைகளை நினைப்பதற்கு முன் உண்டாக்கினாரா? அல்லது தானாகவே இயற்கையில் உண்டாயினவா? என்பதைப்பற்றி சாஸ்திர நிபுணர்கள் பலர் ஆராய்ச்சி செய்து இருக்கிறார்கள். இச்சாஸ்திர நிபுணர்கள் மற்றவர்களைப்போல் விலாப்புடைக்க உண்டு விட்டு திண்ணையில் புரண்டுகொண்டு பிறரை ஏமாற்ற என்று எழுதிய கட்டுக்கதைகள் அல்ல. இரவுபகலாய் ஊணுறக்கம் இன்றி தமது உயிரையும் தியாகம் செய்து மூளையைக்கலைத்து எழுதிய உண்மை மொழிகள். இத்துறையில் மிக்க ஆராய்ச்சி செய்தவர்களில் சார்லஸ் டார்வின் என்பவர் மிக்க மேம் பட்டவர்.

பூமி தனியான ஒரு கிரணமாய் தோன்றி சுமார் 2000 000,000 வருஷங்களுக்கு மேலாகிறது. இது எப்படி உண்டாயிற்று என்று சொல்லுவதற்கு இது தகுந்த இடமும், காலமும் அல்ல. பூமி முதலில் ஒரு வாயுரூபமாக இருந்தது. அப்பொழுது அதில் ஜீவராசிகள் ஒன்றும் இல்லை. பிறகு நாளாக ஆக அது குளிர்ந்து தற்பொழுதிய நிலைமையை அடைந்தது.

பூமியின் தரை செங்கற்களை அடுக்கினாற்போல் பலவேறு சமயங்களில் உண்டான அடுக்கடுக்கான பாறைகளால் ஏற்பட்டு இருக்கிறது. இப்பாறைகளின் மேல் வெவ்வேறு காலங்களில் இருந்த மிருகங்கள் தம் எலும்புகள், கிளிஞ்சல்கள், நரம்புகள், தண்டுகள், காலடி கிரல்கள் இவைகளை விட்டு விட்டு போயிருக்கின்றன. மனிதன் ஞாபகத்திற்கு முன் இருந்த பிராணிகளின் தன்மையைப்பற்றி, ஜீவராசிகளின் உற்பத்தியைப் பற்றியும் ஊகிப்பதற்கு இவைகள் தான் தக்க ஆதாரமாக இருக்கின்றன.

இவைகளை ஆதாரமாகக் கொண்டு ஆராய்ந்ததில் இவ்வுலகமும், இவ்வுலகிலுள்ள ஜீவராசிகளும் சிறு எறும்பு முதல் பெரிய யானை வரை, சிறு செடி முதல் பெரிய மரங்கள் வரை திடீரென்று உற்பத்தியாகவில்லை என்று தெரிகிறது. எல்லா ஜீவராசிகளும் முதலில் உருவமில்லாத ஒருசிறு அணுவிலிருந்து (Cell) நாளாக ஆக வெகு நிதானமாய் இவ்வுலக வேறு பாட்டினாலும், வெவ்வேறு மாறு பாட்டையும் சீதோஷ்ண நிலைமையினாலும், தாம் வாழ வேண்டும் என்னும் தேவையினாலும் மற்றும் பலவேறு காரணங்களினாலும், வெவ்வேறு மாறு பாடுகளையடைந்து, இப்பொழுது நாம்காணும் பலவித உருவங்களை அடைந்தன. நாம் காணும் பலவகையான ஊர்வன, பறப்பன, நடப்பன முதலிய மனிதன் உட்பட ஜீவராசிகள், தாவரங்கள் இவைகளுக்கெல்லாம் ஆகாரமாயிருந்தது (Cell) எனப்படும் இச்சிறு அணுதான். இவ்வணு எப்படி வெவ்வேறு மாறுபாடுகளை அடைந்தன என்று எழுதப்புகின் இவ்வியாசம் விரியும். முற்கூறியபடி இவ்வணுவிலிருந்து முதலில் இப்பூமியில் தோன்றியவை சிறு கடல் பாசிகளும், கடலில் காணும் சிறு புழுக்களும், மீன் இனத்தைச் சார்ந்த சிறு ஜீவராசிகள் தான். இந்தக் காலத்திலிருந்த ஜீவராசிகளில் மிகப் பெரியவைகளாக யாதொன்றையும் காணோம், ஆனால் சில ஜல தேள்கள்தான் மிகப் பெரியவைகளாக இருந்தன. இவைகளின் நீளம் சுமார் ஒன்பது அடி இருக்கும். தரையில் வசிக்கக் கூடிய யாதொரு செடி கொடிகளாவது கிடையாது.

இவ்வாறு 500,000,000 வருஷங்கள் சென்றன. உலகம் முழுவதும் தண்ணீர் மூடிக் கொண்டு எங்கு பார்த்தாலும் அலைகள் அதிகமாக அடித்துக் கொண்டிருந்தன. இக்காலத்திலிருந்த முக்கிய ஜீவராசிகள் மீன்கள் தான். முதுகெலும்புள்ள ஜீவராசிகள் முதலில் உண்டானவை இவைகள் தான். இவைகளில் சில இரண்டு மூன்று அடி நீளமுள்ளதாகவும், மற்றவை இருபது அடி நீளமுள்ளதாகவும் இருந்தன.

நாட் செல்ல செல்ல தண்ணீர் கொஞ்சம் வற்றி தரை உண்டாயிற்று. தரையில் முதலில் உற்பத்தியான முதல் உயிர் ராசிகள் தாவரவர்க்கங்கள்தான். தண்ணீரில் இருந்த மீன்கள் கொஞ்சம் கொஞ்சமாக தரைக்கு வந்தன, தண்ணீரில் கரைந்திருந்த காற்றை உட்கொண்டிருந்த இவைகள் நேராக காற்றை சுவாசித்தன. இவைகள் கொஞ்சம் தரையிலும், கொஞ்சம் தண்ணீரிலும் வசித்து தவளையினத்தை சேர்ந்தவைகளாக மாறின. ஆயிரம்கால் பூச்சிகளைப் போன்றவைகளும், அட்டைகளும் மற்றும் இவ்வினத்தை சேர்ந்தவைகளும் உண்டாயின.

நாட் செல்ல செல்ல தண்ணீர் வற்றி உஷ்ணம் அதிகரித்தது. தவளைக்கு பிறகு முட்டையிட்டு குஞ்சு பொரிக்கும் பாம்பினத்தைச் சேர்ந்த பிராணிகள் உலகத்தில் தோன்றின. இவைகள் தண்ணீருக்குச் செல்லாமல் தரையில் வசித்து வந்தன. இவைகளுக்கு உஷ்ணம் வேண்டும்.

கொஞ்சம் வருடங்கள் சென்றதும் தாய்கள் உயிர் வாழ்வதற்காகவும், இரை தேடுவதற்காகவும், மேற்தோல்கள் கொஞ்சமாக மாறி இறகுகளாயின. இவைகள்தான் பறவைகள். பிறகு உலகத்தில் வசிப்பது கஷ்டமாகிவிடவே அதற்குத் தகுந்தாற்போல் உருவமும், மேற்சருமமும் மாறி நான்குகாற்பிராணிகளும், குட்டி போட்டு பால் கொடுப்பனவுமான முயல் இனத்தைச் சேர்ந்த மிருகங்கள் தோன்றின.

இவைகளிலிருந்து குரங்கினங்கள் உண்டாயின. நான்கு கால் பிராணிகள் முன் கால்களைப் பிடிப்பதற்கும் மரங்கள் ஏறுவதற்கும் உபயோகப்படுத்தி வந்ததால் அவைகள் நீண்டு கைகள் ஆயின. இதனால் தான் குரங்குகளின் முன்கால்கள் கைகளைப் போலவும் உபயோகப் பட்டுவருகின்றன.

குரங்குகள் கொஞ்சம் நாளில் மானிட ரூபத்தை அடைந்தன. முன் கால்களை நடப்பதற்கு உபயோகப் படுத்தாததினாலும், மரங்கள்மேல் ஏறுவதற்கும் பிடிப்பதற்கும் அதிகமாக வந்ததாலும், அவைகள் கைகளாக மாறின. இப்படியாக மனிதன் முதலில் உலகில் தோன்றினான். மானிட உருவம் தோன்றி ஐம்பதினாயிரம் வருஷங்கள் ஆயின. முதலில் உண்டான மனிதனுக்கும் இப்பொழுது இருப்பவர்களுக்கும் அங்கங்களில் கொஞ்சம் வித்தியாசம் உண்டு. நன்றாக உபயோகப் படுத்தின உறுப்புகள் பலமடைந்து, உபயோகப்படாதவைகள் பலஹீனமடைந்து மறைந்தன.

இவ்விதமாக இவ்வுலகில் வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு பிராணிகள் வசித்து வந்தன. ஒரு சிறு அணுவிலிருந்து வெவ்வேறு மாறுதல்களால் மனிதன் உண்டானான். இப்படி ஆவதற்கு பலகோடி வருஷங்கள் ஆயின. இவ்வணு தன் இயற்கையாலும், வாழவேண்டும் என்னும் தேவையாலும், பற்பல மாறுபாட்டையும் காரணங்களாலும் மனித உருவத்தை அடைந்ததேயல்லாமல் ஒரு பிரம்மாவோ, கிறிஸ்தவ-இஸ்லாமிய-அல்லது வேறு மதக்கடவுள்களோ வேலையற்று உட்கார்ந்து மனிதனையும் மற்ற ஜீவராசிகளையும் "ஒரே நாளில் ஒரே நினைப்பில்" மண்பொம்மைகளைப் போல் செய்வித்து விடவில்லை.

கும்பகோணத்தில் கூட்டம் சேர்ந்தால்
காலரா வரும், பிளேக்கு வரும்.

ஈ. வெ. ராமசாமிக்கு முனிசிபல் உபசாரம்.

தோழர் ஈ.வெ. ராமசாமிக்கு ஈரோடு நகர முனிசிபல் கவுன்சில் மண்டபத்தில் 3—12—32-ந்தேதி மாலை 5-30 மணிக்கு ஈரோடு முனிசிபல் கௌன்சிலர்களாலும், ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் போர்டு நிர்வாக சபையாலும், ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் உபாத்தியாயர் சங்கத்தாலும் தனித்தனியே மூன்று உபசாரப் பத்திரங்கள் வாசித்துக்கொடுக்கும் விழா நடத்தப்பட்டது. இவ்விழாவானது ஈரோடு முனிசிபல் ஆபீசு காம்பவுண்டில் கௌன்சில் மண்டபத்துக்கு முன்னால் இதற்கென்றே போடப்பட்ட ஒரு பெரிய கொட்டகைக்குள் நடத்தப்பட்டது. கொட்டகையானது துணிகளாலும், காகிதக்கொடி புஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், வாழை கமுகு முதலிய மரங்களும், மற்றும் அலங்காரப் பூஞ்செடிகளாலும் சிங்கரிக்கப்பட்டிருந்தது. சிறு மழை தூரல் இருந்தும் குழந்தைகள் பெரியவர்கள் உள்பட சுமார் 2000 பேர்கள்வரை வந்து, குறிப்பிட்ட நேரத்திற்கு அரைமணி முன்னதாகவே கூடிவிட்டார்கள், மேளவாத்தியங்கள் முழங்கிக்கொண்டிருந்தன. கூட்டத்தில் முன்வரிசையில் காணப்பட்டவர்கள் தோழர்களான:— முனிசிபல் சேர்மென் கே. ஏ. ஷேக்தாவுத் சாயபு வைஸ்சேர்மென் ஈ. வி. நஞ்சப்பசெட்டியார், கௌன்சிலர்கள் எஸ். ஆர். கண்ணம்மாள், ஈ. ஓ. சி. முத்துசாமிக் கவுண்டர், எம். எஸ். முத்துக்கருப்பஞ்செட்டியார், எம். கே. முகமது சுல்தான் சாயபு; அப்துல் ரஜாக்சாயபு, குதரத்துல்லா சாயபு, கேசவலால் காளிதாஸ், கே. பி. ஷண்முகம்பிள்ளை, ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர், எம். அப்பைய கவுண்டர், ராகவேந்திரராவ், ஜ. ம. கா. மூர்த்துசாசாயபு, எஸ். பி. சின்னுசாமி கவுண்டர், வெங்கிடாசல முதலியார், மாரிமுத்து பண்டாரம், ஈ. ஓய். சுல்தான் சாயபு, எம். சிக்கைய நாயக்கர், ஈ. எஸ். கோவிந்தசாமி நாயுடு, எ. கொளந்தவேலு பிள்ளை, கே. எம். சீனிவாசபிள்ளை, ஜில்லா போர்டு வைஸ் பிரசிடெண்ட் எஸ். என். பொன்னைய கவுண்டர் ஆகியவர்களும் மற்றும்

வக்கீல்கள்.

தோழர்கள் ஈ. எம். அண்ணாமலை பி.ஏ., பி. எல்., எஸ். ரங்கசாமி கவுண்டர் பி. ஏ., பி. எல்., பவானி க. தியாகராஜ செட்டியார் பி. ஏ., பி. எல்., கே. எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார், டி. எம். நரசிம்மாச்சாரியார், ஈ. எஸ். தண்டபாணி அய்யர், கோபால செட்டியார் பி. ஏ., பி. எல்., ஈ. வி. வேணுகோபால் நாயுடு பி. ஏ., பி. எல்., யு. எஸ். சுப்பிரமணிய அய்யர், ஈ. எஸ். வெங்கிட்டப்பசெட்டியார் பி. ஏ., பி. எல்., சீனிவாசராகவ அய்யங்கார், வைத்தியநாத அய்யர், சி. ரங்கசாமிகவுண்டர், கிருஷ்ண அய்யர், எம். தெய்வசிகாமணிக்கவுண்டர், மற்றும்

வியாபாரிகள்.

தோழர்கள் எஸ். யி. ஜி. மகமது இப்ராகிம், ஆஜிமை ஷேக்மதார் சாயபு, ஜ. கு. பாபுசாயபு ஜ. ம. காதர் உசேன் சாயபு, மெ. மு. கிருஷ்ண செட்டியார், சா. ராமசாமி நாயக்கர், உப்பு மண்டி காதர்சாயபு, முகமது மீராசாயபு, ஈ. ஒய். உம்மர் நவாஸ்கான் சாயபு, மிராசுதார் கே. டி. மாரிமுத்துபிள்ளை, அப்பச்சிமார் மடம், மடாதிபதி எம். ஆண்டமுத்து கவுண்டர், நீலகிரி ஜில்லாபோர்டு வைஸ்பிரசிடெண்ட் பி. சாமண்ணா, எஸ் ஆலிம் சாயபு, அக்பர் சாயபு, கே. அப்துல் சத்தார் சாயபு, எம். கே. பாஷா சாயபு, மொட்டயப்ப முதலியார், எஸ். ராமசாமி நாயக்கர், வி. வி. சி. ஆர். முருகேச முதலியார், வி. வி. சி. பெரியசாமி முதலியார், என். எம். ஷண்முகசுந்தரம், வி. எல். ஏ. முருகேசமுதலியார், வி. எஸ். ஏ. அண்டு பிரதர்ஸ் ஏஜண்ட் ராமசாமி முதலியார், வி. எஸ். ஏ. அண்டு பிரதர்ஸ், மாரியப்பா, வி. வெங்கிடுசாமி ரவுத்து, பி. எஸ். அசன் சாயபு சன்ஸ், பி. எஸ். லைசத் மீரா சாயபு, பி. பி. பக்ருதீன்சாயபு, ஏ. ஜி. சுலைமான் பாட்சா சாயபு, மகம்துயாகுப் ஆலிம் காதர் பாட்சா சாயபு, கே. காதர்மீரா உசேன், கே. கே. அப்துல் சத்தார் சாயபு, எச். பாட்சா சாயபு, எம்.கே. பாட்சா சாயபு ஈ. எம். கிருஷ்ணசாமி, ராமசாஸ்திரி ஆர். வெங்கிட்ரமண அய்யர், மற்றும்,

டாக்டர்கள்.

தோழர்கள் சிவராம கிருஷ்ணய்யர், கிருஷ்ணசாமி, பணிக்கர், எம். கிருஷ்ணசாமி, ரங்கசாமி, செரியன், மற்றும்,

உத்தியோகஸ்தர்கள்.

ஜில்லா முன்சீப், பாங்கு ஏஜண்ட், காஷியர், எக்சைஸ் இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர், போலீஸ் இன்ஸ்பெக்டர், அர்ப்பன் பாங்கு செக்ரட்டரி மரியதாஸ் செட்டியார், தாலூகா போர்டு ஆபீஸ் மேனேஜர், முனிசிபல் செக்ரட்டரி கே. ராமசாமி முதலியார் முதலிய பல உத்தியோகஸ்தர்கள் மற்றும்

உபாத்தியாயர்கள்

தோழர்கள் ஹெட்மாஸ்டர் எஸ். மீனாட்சிசுந்தரம் பி.ஏ., எல்.டி., சீனிவாசராகவ அய்யங்கார் பி.ஏ., எல்.டி. ஜில்லாபோர்டு ஹைஸ்கூல் எட்மாஸ்டர் கந்தசாமிமுதலியார் பி.எ. எல்.டி. இ. டி. பாலகிருஷ்ண முதலியார் முனிசிபல் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் தாயாரம்மாள் இ. வி. ஜெயராம், ஈ. எஸ். பாலகிருஷ்ணன், ஏ. ரத்தின சபாபதி, அ. ராகவன், என். பி. காளியப்பன், டி. டி. கோபால், மேரி கமலம், தேவானந்தம், பங்கஜம், அன்னபூரணி, மருதாசலம் பி. ஏ., பத்தரையா, சிதம்பர முதலியார், இன்னும் பலர் வந்திருந்தார்கள்.

கூட்டம் துவக்கப்பட்டதும் வாத்தியம் நிறுத்தப்பட்டு ஈ. வெ. ராமசாமியை பீடத்திலமர்த்தி, பள்ளிக்கூட மாணவிகளால் முதலில் தோழர் ராமசாமி பேரில் பாடப்பட்ட வரவேற்பு பாட்டுகளைப்பாடி வரவேற்றதும், பல பெண்களால் கோலாட்டமும், கும்மியும் நடந்தது. அவற்றுள் சமதர்மக் கொள்கைகளும், சுயமரியாதைக்கொள்கைகளும், வைத்து தோழர் ராமசாமியின் மீது பாடிய வரவேற்புப்பாட்டுகளாகவே இருந்தன.

பிறகு முதலில் சேர்மென் தோழர் கே. ஏ. ஷேக்தாவுத் சாயபு அவர்களால் ஆங்கிலத்தில் நீண்டதொரு உபசாரப்பத்திரம் வாசித்து கொடுக்கப்பட்டது. பிறகு மஹாஜனஸ்கூல் செக்ரட்டரி எம். சிக்கையா அவர்களால் ஸ்கூல்போர்டு உபசாரப்பத்திரம் தமிழில் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பின்னர் மஹாஜன் ஸ்கூல் ஹெட்மாஸ்டர் எஸ். மீனாட்சிசுந்தரம் பி. ஏ. எல். டி., அவர்களால் தமிழில் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. முனிசிபாலிட்டியார் அளித்த பத்திரம் பின் வருமாறு:—

பெருமை தங்கிய தலைவரே!
மதிப்பு வாய்ந்த தோழரே!

ஈரோடு நகர சபைத்தலைவரும், அங்கத்தினர்களுமாகிய நாங்கள் தங்களுடைய நீண்ட மேல் நாட்டுச்சுற்றுப் பிரயாணத்தின் பிறகு, எங்களிடை தங்களை வரவேற்கும் இக்காலை மிகப் பெருமையுடையதாய்க் கருதுகிறோம். தாங்கள் இங்கில்லாதசமயம் நாங்கள் அதிகமான கவலையும் பயமும் அடைந்தோம். ஏனெனில் தாங்கள் புறப்படும்போது நோய்வாய்ப்பட்டிருந்ததும், பின்னர் அதிக நாளைக்குப் பிறகு இரண்டொரு சமயமே தங்களைப் பற்றிய தகவல் தெரியமுடிந்ததே காரணமாகும். அதிக நாள் சுற்றுப் பிரயாணத்தின் பின்னர் தாங்கள் ஆரோக்கியமாயும் உற்சாகமாயும் இருப்பதைக் காண நாங்கள் அளவிலா மகிழ்ச்சியடைகிறோம். நாகரீகத்தில் சிறந்து, கைத்தொழில், விஞ்ஞானம், ராஜீயம் முதலிய எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைந்துள்ள மேனாட்டின் காட்சிகளைக் கண்டு களித்து ஞாபகத்தில் வைத்துள்ள தங்களுக்கு இங்கு நடைபெறும் எங்கள் வரவேற்பும், இக்கூட்டமும் சாதாரணமானதாகவே காணப்படலாம். ஆனால் எங்களுடைய இருதய பூர்வமான அன்பானது சாதாரணமானதல்ல என்றே தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மாட்சி மிக்க ஐய! தங்கள் வாழ்க்கையை உவமானமற்றது. ஓர் குற்றமற்ற மேதாவியின் கியாதியே போன்று, சாதாரண பாமர மக்களிடையே ஓர் அபிமானமுள்ள சீர்திருத்தக்காரராக வேலை செய்யும்போதும், பலதொல்லைகளுக்குட்பட்ட இந்நகர சபைத்தலைவராய் இருக்கும்போதும் பல பக்கங்களிலிருந்தும் வரும் எதிரிகளது அம்புகளை பொருட்படுத்தாது, கலங்காத ராஜீய வாதியாயிருக்கும்போதும், தாங்கள் தனித்தே திகழ்வதும், நிலைதவறா நெஞ்சமும், சாந்தமும், கடைசியில் எதிரிகளுணர்ந்து தங்களையே தலைவராய்க் கொள்வதும், அனுபவ பூர்வமான பிரசித்தமாகும். மங்காத புகழ் படைத்த புத்தர் போன்ற மேதாவிகளது உபதேசங்களே போன்று, தாங்கள் தோற்றுவித்த சுயமரியாதை இயக்கம் சரித்திரத்தில் இடம் பெறுமென்றே எண்ணுகிறோம். உலகிலுள்ள மானிட கோடிகள் எவரும் தங்கள் சுயமரியாதைக் கொள்கைகளில் எதையாவது ஒன்றை அனுஷ்டித்தே யாக வேண்டும்.

தாங்கள், தங்கள் வாழ்நாளை மனிதவர்க்கத்தின் க்ஷேமத்திற்குழைக்கவே அர்ப்பணம் செய்துவிட்டீர்கள். தாங்கள் இது போது மேற்கொண்ட மேல் நாட்டுச் சுற்றுப் பிரயாணமும்,

தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

அடுத்த வாரம்.

தோழர் ஈ. வெ. இராமசாமி இங்கிலாந்தில் மேக்ஸ்ப்ரோ [பான்சிலே] லேக்பார்க்கில் 20—6—32-ந்தேதி நடந்தவேலை இல்லாத்தொழிலாளிகள் [50 ஆயிரம் பேர்] ஊர்வலக்கொண்டாட்டத்தினத்தில் பதினாயிரக்கணக்கான தொழிலாளிகள் முன் செய்த பிரசங்கம் அடுத்த வாரம் வெளிவரும்.

தேசியத்தின் விளைவு.

(தேசீயத்துரோகி)

1914-ம் வருஷம் முதல் 1918-ம் வருஷம்வரை நடந்த உலக மகா யுத்தமானது அதில் சம்பந்தப்பட்ட ஒவ்வொரு தேச மக்களையும் தேசியம்—தேசாபிமானம் என்பவற்றின் பேரால் செய்யப்பட்ட பிரசாரத்தின் பயனாகவே அந்தயுத்தத்தில் சம்மந்தப்படும்படி செய்தது. இந்த உலக மகாயுத்தத்தின் பயனாய் கொல்லப்பட்டவர்கள் 9743914 கிட்டத்தட்ட ஒரு கோடிபேர். காயம்பட்டவர்கள் 20927459 இரண்டு கோடிப் பெயர்களுக்கு மேலானவர்கள். காணாமல் போனவர்கள் 3000000. இந்த மகாயுத்தத்திற்கு செலவான தொகை 70000000000 பவுன் (எழு ஆயிரம் கோடி பவுன்) அதாவது 1000000000000 ஒரு லட்சம் கோடி ரூபாய்கள் ஆகும்.

இது நிற்க இன்றைய தினமும் உலக யுத்தத்தை எதிர்பார்த்து "தேசாபிமானத்தின் காரணமாக" என்று தேசத்தைக்காப்பாற்றுவதற்காக உலக அரசாங்கங்கள் மொத்தமும் செலவு செய்யும் தொகை சென்ற 1931-ம் வருஷத்திற்கு மாத்திரம் 800000000 எண்பது கோடி பவுன் அதாவது 10800000000 ஆயிரத்து எண்பது கோடி ரூபாய் ஆகும்.

இதை தினக்கணக்காய் பிரித்தால் தினம் 1-க்கு 2000000 பவுன் (இருபது லட்சம் பவுன்) அதாவது நாள் 1-க்கு 27000000 இரண்டே முக்கால் கோடி ரூபாய் செலவு செய்யப்படுகின்றது;

பிரிட்டிஷ் அரசாங்கமானது தனது அரசாட்சி வரி வரும்படியில் உள்ள ஒவ்வொரு பவுன் வரும்படியிலும் 13 ஷில்லிங் யுத்த தேசாமானத்திற்காக, தேசத்தைக் காப்பாற்ற தேசிய கடனுக்கும் சேனை தளவாடங்களுக்காக அதாவது

யுத்தக்கடனுக்கு வட்டி	0—9—0
யுத்த வீரருக்குபென்ஷன்	0—1—3
தற்காலம் ராணுவத்திற்கும் தரை, கப்பல், தளவாடத்திற்கும்	0—2—9
ஆக	0—13—0

டி பதின்மூன்று ஷில்லிங்போக பாக்கி இருக்கும் ஷில்லிங்கில்

கல்விக்கு	0—1—5
உத்தியோகபென்ஷன்	0—1—3
ஸ்தலஸ்தாபன உதவி	0—1—2
வேலை இல்லாதவர்களுக்கு பிச்சை	0—1—2
வீட்டு வசதி கோர்ட்டு வசதி வ.கையருவுக்கு	0—0—8
போலீஸ்	0—0—6
விவசாயம். சுகாதாரம்	0—0—2
சில்லரை	0—0—8
ஆக	0—7—0

ஆக பிரஜைகளின் நன்மைக்கு என்று ஏழு ஷில்லிங்கும் செலவு செய்யப்படுகிறது.

அதாவது மேல்கண்ட யுத்தக்கடன் வட்டிக்காக என்று செலவு செய்யப்படும். 9 ஷில்லிங்கும் முதலாளிமாகளுக்கே போய் சேரும். தேசாபிமானத்திற்காக ஏற்பட்ட காரியத்தின் பயனாய் இன்று முதலாளிமார்கள் தேச அரசிலா வரும்படியில் கிட்டத்தட்ட சரிபகுதியை உலகமுள்ளளவு அனுபவிக்க மார்க்கம் ஏர்படுத்திக்கொள்ளப்பட்டது.

எனவே பலகோடிக்கணக்கான மக்களை பலிகொடுத்து, காயப்படுத்தி காணாமல் போகச்செய்ததும் அல்லாமல், மக்களிடத்தில் காட்டிப்பிழிந்து வசூல் செய்யும் வரியிலும் நூற்றுக்கு 65 பாகத்தை தேசத்தைக்காப்பாற்ற என்னும் பேரால் இராணுவத்திற்கும், தளவாடங்களுக்கும் செலவு செய்தும், இந்ததேசத்தில் இன்று பத்து லட்சக்கணக்கான மக்கள் வேலையில்லாமலும், ஜீவனத்துக்கு தங்களுக்கும் தங்கள் பெண்டுபிள்ளைகளுக்கும் அரைவயிற்றுக்கு போதுமான கஞ்சிக்குக்கூட மார்க்கமில்லாமலும் தவித்து வருகிறார்கள். இது பாமர ஜனங்களுடைய—ஏழை ஜனங்களுடைய தேசாபிமான முட்டாள்தனமா? அல்லது பணக்காரர்களுடைய 'படித்த' கூட்டத்தாருடைய தேசாபிமான பித்தலாட்டமா? என்பதைச் சிந்தித்துப்பாருங்கள். அடுத்தவாரம் தேசியக்கடன் என்றால் என்ன? என்பதைப்பற்றி எழுதுகிறேன். (தொடரும்)

பினாங்கில் சுயமரியாதைத் திருமணம்.

1932-ஞ நவம்பர்-மீ 19-உ சனிக்கிழமையன்று இரவு 7-30 மணிக்கு பி. முனுசாமியின் குமாரி தோழர் சுப்பம்மாளுக்கும் ஏ. பெரியோன் மகன் பி. ஏ. மூர்த்தி அவர்கட்கும் இந்துவாலிபசங்கத்தில் தோழர். டி. ஆர். ரெத்தினமவர்கள் தலைமையில் தோழர் எஸ். ஆர். வீரப்பனவர்களால் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடத்திவைக்கப்பட்டது. மணமக்களுக்குப் பரிசாக "பெண்ணின் பெருமை" என்னும் புஸ்தகம் இந்துவாலிப சங்கஅங்கத்தினர்சார்பாக டி. வி. செல்லையா அவர்களால் அளிக்கப்பட்டு மலர்மாலைகளும் இடப்பட்டது. பின் பல சங்கங்களின் சார்பாக மாலைகள் மணமக்களுக்குச் சூட்டப்பட்டது. பலர் திருமணத்தைப்பற்றி பேசியபின் திருமணம் முடிந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

கண்ணம்மாள் தீர்மானம்

ஈரோடு முனிசிபல் கவுன்சிலுக்கு, கவுன்சிலர் எஸ். ஆர். கண்ணம்மாள் அனுப்பிய தீர்மானங்கள்.

1. ஈரோடு முனிசிபல் கவுன்சில் அதிகார எல்லைக்குள்பட்ட ஸ்தாபனங்களில் பெண்களுக்கு உத்தியோகம் வழங்கப்பட வேண்டுமென இந்தக் கௌன்சில் தீர்மானிக்கிறது.

2. அந்தப்படி வழங்கப்படுவதை அமுலில் நடத்துவதற்காக பெண்களுக்கென்று ஒரு குறிப்பிட்ட அளவாவது உத்தியோகங்கள் ஒதுக்கி வைக்கவேண்டுமென்றும், அந்தப்படி ஒதுக்கி வைப்பதில் முக்கியமாய் (பர்த்அன்ட்டெத் ரிஜிஸ்தார்) ஜனன மரணபதிவுவேலை, அம்மை குத்தும் வேலை (Vaccintòr) கஜான்சி (Cashier) டைப் அடித்தல் (Typewriter]

வரிவசூல் (Bill Callector]

வார்ட் மேஸ்த்திரி, ஆபீசு அட்டெண்டர் முதலிய உத்தியோகங்களும், மற்றும் சாத்தியமானவைகளையும் ஒதுக்கிவைத்து அவைகளில் பெண்களை நியமிக்கவேண்டுமென்று இக்கவுன்சில் தீர்மானிக்கிறது.

3. மேல்கண்ட இந்த உத்தியோகங்களுக்காக தனி பரீட்சையோ, தற்பித்தோ (Training) செய்யப்பட வேண்டிய அவசியமிருந்தால் அதற்கும் வேண்டிய உதவி கூடுமானவரை செய்யவேண்டியது இக்கௌவுன்சிலின் கடமை என்பதாக தீர்மானிக்கிறது.

4. பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்களை நியமிப்பதில், பெண்கள் ளிக்கூடங்களின் உபாத்தியாயர்கள் அல்லாமல் ஆண்பிள்ளைகள் பள்ளிக்கூடங்களிலும் குறைந்த அளவு 1, 2, 3-வது வகுப்புகளுக்கு பெண்கள் உபாத்தியாயர்களையே நியமிக்க வேண்டுமென்று இந்தக்கௌன்சில் தீர்மானிக்கிறது.

என்னால் அனுப்பப்பட்ட மேற்கண்ட தீர்மானங்கள் பெண்களும் ஆண்களோடு உத்தியோகத்தில் போட்டி போட வேண்டுமென்ற காரணத்திற்காகவே கொண்டுவரப்பட்டதல்ல. ஆனால் பெண்களுக்கு எவ்விதத்தொழில் செய்யவும், எவ்வித உத்தியோகம்பார்க்கவும் போதிய சாமர்த்தியமும், தைரியமும், நிர்வாகத்திறமையும் உண்டு என்பதை நிதர்சனமாக்கவும், பெண்களுக்கு ஆண்மக்களைப்போலவே சமூக வாழ்க்கையில் எல்லாத் துறைகளிலும் சமபங்கும், சம சுதந்திரமும், பொறுப்பும் கொடுக்கப்பட வேண்டியது அவசியம் என்பதை வற்புறுத்துவுமேயாகும். ஆகையால் இத்தகைய தீர்மானங்களை போன்று ஒவ்வொரு நகர சபையிலும் உள்ள எனது சகோதரிகளால் தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட வேண்டுமென்றும், அந்தப்படியே அவை அமுலுக்குவர வேண்டுமென்றும் பெரிதும் விரும்புகிறேன்.

S. R. K.

தோழர் படேலுக்கு

சக்கலத்வாலாவின் கடிதம்.

தேசீயக்கிளர்ச்சி முதலாளிகள் சூழ்ச்சி.

ராய்ட்டர் மாஜி பார்லிமெண்ட் மெம்பரும், பொதுவுடமைக்கட்சி (கம்யூனிஸ்ட்) கட்சியைச்சேர்ந்தவருமாகிய தோழர். சக்லத்வாலா அவர்கள் மேல் நாடு சென்ற தோழர் விட்டல்பாய்பட்டேல் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இருக்கிறார். அக்கடிதம் லண்டனில் உள்ள இந்தியர்களை திடுக்கிடச்செய்துவிட்டது. அதில் குறிப்பிட்டிருப்பதாவது

தோழரே,.... காங்கிரஸ்தற்போது கையாண்டுவரும் பஹிஷ்காரக் கிளர்ச்சி நடவடிக்கைகள் ஏகாதிபத்தியத்தை அடியோடு கவிழ்க்க முயற்சி செய்யும் பொதுவுடமை ஜனங்களுக்கு முற்றிலும் பாதகமாகவே இருக்கின்றன.

தற்காலீகமாகவே லங்காஷியர் சாமான்கள் பஹிஷ்காரம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் உள்ள நெசவு ஆலை சொந்தக்காரர்கள் பருத்தி வியாபாரிகள் முதலிய முதலாளிகள் லாபம் பெரும் பொருட்டே இத்தகைய சூழ்ச்சி தேசிய காங்கிரசால் செய்யப்பட்டிருக்கிறது. இதேபோல்தான் அயர்லாந்திலும் திவாலரா செய்து வருகிறார். அவர் நடவடிக்கையானது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் பிரிட்டிஷ் ஐரிஷ் முதலாளிகளுக்கும் விரோதமாகக்கிளர்ச்சி செய்வதுபோல் கபடநாடகம் ஆடி வருகிறார். அப்படிப்பட்ட திவாலராவின் கூட்டுறவையும், ஒத்துழைப்பையும் நீங்கள் மதிக்கிறீர்கள்.

வீ. ரி.

நாஸ்திகம்

காட்டுத் தீ போல் பரவுகிறது.

[ஓர் பிரதாபி]

ஐரோப்பாவில் முக்கியமான தேசமாகிய ஜர்மனி தேசத்தில்மாத்திரம் இன்றையதினம் 10-லட்சத்திற்கு மேற்பட்ட நாஸ்திகர்கள் இருந்துவருகிறார்கள். மேலும் இந்த எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகின்றது. இதற்கு அத்தேசமெங்கும் பலமான பல ஸ்தாபனங்கள் இருப்பதோடு அவைகள் மூலம் வெகுதீவிர நாத்திகப் பிரசாரங்களும் நடந்துவருகின்றன. இவர்களின் பிரசாரத்திற்கு முக்கிய ஆதாரமாகத் தங்கள் தங்கள் பகுத்தறிவை உபயோகிக்கவேண்டுமென்பதும் அதன்படிதான் நடக்கவேண்டுமென்பதுமேயாகும்.

∴ ∴

சென்ற சில வருஷ காலத்திற்குள் சுமார் 20 லட்சம் பேர் கிறிஸ்தவ மதத்தை விட்டுவிலகி பகுத்தறிவாளர்களாகஇருந்துவருகிறார்கள். இவர்களில் அதிகமானவர்கள் கடவுளை நம்பாதவர்களேயாவார்கள். பலர் பச்சை நாத்திகர்களேயாவார்கள் இதைப்பார்த்து மனம் சகியாத மதப் பித்தர்கள் இந்தப் பிரசாரம் போல்ஷவிக் பிரசாரமென்றும்ரஷிய சர்க்காரார் பணம் முதலிய உதவி செய்வதாகவும் சொல்லி விஷமப் பிரசாரமும் செய்கிறார்கள்.

∴ ∴

என்றாலும் கடவுள் என்பதாக ஒன்று இல்லை என்று சொல்லும் நாத்திகர்களை எல்லாம் ஒன்றுசேர்த்த உலக நாத்திக சங்கம் என்பதாக ஒன்றை ஏற்படுத்தி அதன்மூலம் உலகப் பிரசாரம் செய்யவேண்டுமென்பது ரஷியர்களின் யோசனை ரஷியநாத்திகர்களை அறிவிலிகள் என்று சுலபத்தில் முடிவு கட்டிவிடமுடியாது. அவர்களது புத்திநுட்பத்தையும் வேலைத்திறனையும் நாம் மெச்சித்தான் ஆகவேண்டும்.

∴ ∴

காட்டுமிராண்டிகள் என்று கருதப்பட்டுவந்த ரஷியர்கள் இப்போது உலகத்தில் உள்ள எந்தக்கடவுள்- பக்தன் முன்னும் மதபக்தன் முன்னும் பூதம்போல் நிற்கிறார்கள்.

∴ ∴

அது மாத்திரமா "காட்டுமிராண்டி ரஷியர்கள்" இன்று எந்த ஏகாதிபத்யத்தின் முன்பும் எந்த சக்கரவர்த்தி முன்னும் எந்த அரசன் முன்னும் எந்த செல்வன்.கோடி கோடீஸ்வரன் முன்னும் எந்த சோம்பேரி முன்னும் எமன்போல் நிற்கிறார்கள்.

∴ ∴

"காட்டுமிராண்டி ரஷியர்களையும் "காட்டுமிராண்டி" ரஷிய தேசத்தையும் கண்டவர்களைக் கண்டு ஏகாதிபத்தியமும் ஏதேச் சாதிகாரமும் கோடீஸ்வர செல்வவான்களும் "உயர்ந்த உத்தமப் பிராமண ஜாதிகளும் காலோடு மூத்திரம் பேய்ந்துகொள்ளுகின்றன.

∴ ∴

நாத்திகம் ருஷியாவைவிட்டு வெளியில்வர அனுமதிக்கக் கூடாது என்று எவ்வளவோ பாதுகாப்புகள் ஏற்படுத்தியும் எப்படியோ ஜர்மனியில் நாத்திகத்தீ காட்டுத்தீபோல் பரவிவருகின்றது, பிரான்சிலும். இங்கிலாந்திலும் நாத்திகம் ஒரு நாகரீக ஸ்தானத்தை பெற்றுவிடடது.

∴ ∴

ஸ்பெயினில் கோவில்களை எல்லாம் காற்றாய்ப் பறக்கடிக்கவிட்டது, குருக்கள்மாரை யெல்லாம் ஆலாய்ப் பறக்கச்செய்துவிட்டது. மததர்மச் சட்டங்களை யெல்லாம் மண்ணில் புதைத்து மனிதசமதர்ம சட்டத்தை முழக்குகின்றது. ஆஸ்திரியாவில் உலக நாத்திக சங்கத்தின் தலைமை ஸ்தாபனம் கொட்டுமுழக்குடன் குடிபுகுந்துவிட்டது. ஜெக்கோசிலாவாக்கியாவில் உலக நாத்திகமகாநாடு கூட்டி திட்டங்கள் வகுத்தாய்விட்டது.

∴ ∴

துருக்கியிலும் ஈஜிப்டிலும் நடைபெற்றுவரும்-நாத்திகப் பிரசாரம் வெகுசீக்கிரத்தில் வெடிகுண்டு போல் வெடிக்கப் போகின்றது. இந்த வெடிகுண்டு தூள்கள் (செல்கள்) இந்தியாவில் சிதறிவிழுந்து பெட்ரோல் டாங்கியில் நெருப்புப் பிடித்ததுபோல் பிடித்துவிடப்போகின்றது.

∴ ∴

சீனாவிலும் ஜப்பானிலும் உள்ள மக்கள் ஏற்கனவே நாத்திகக் கொள்கையைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் இந்திய சாவகாசத்தின் பயனாய் அவர்களும் ஒருவிதத்தில் மூடநம்பிக்கைக்காரர்களாய் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இப்போது அவ்விரு தேசத்திலும் 100 க்கு 50 பேருக்கு மேல் குறிப்பாக வாலிபர்களில் 100 க்கு 75 பேருக்குமேல் நாத்திகர்கள் ஆகிவிட்டார்கள்.

∴ ∴

மற்றும் பல நாடுகளிலும் புதியகிளர்ச்சி, புதிய நாகரீகம், புதியமுன்னேற்றம் என்று சொல்லப்படுவதெல்லாம் நாத்திகப் பிரசாரமும் பகுத்தறிவுப் பிரசாரமுமாகவே இருக்கக் காண்கிறோம்.

∴ ∴

மேனாடெங்களும் "எனக்கு மதம் இல்லை" "நான் தொழுகைக்கு-பிரார்த்தனைக்கு போவதில்லை" என்று சொல்லுவது "அதி தீவிர தேதியவார்த்தை" விட மேலான கௌரவமாக மதிக்கப்படுகின்றது.

∴ ∴

இவை இத்தனைக்கும் அடிப்படையாயும் ஆதாரவாயும் இருந்து நெய்யை விட்டு நெருப்பை அணைக்க முயற்சிப்பதுபோல் உதவிவரும் சாதனம் இவைற்றிற்கு எதிராகச் செய்யப்படும் எதிர்பிரசாரங்களேயாகும்.

∴ ∴

எதிர்பிரசாரமும், அடக்குமுறையும் உதவிசெய்வதுபோல் "ரஷயப்பிரசாரமும்" போல்ஸ்விக் பிரசாரமும் "ரஷ்யபணஉதவிப்பிரசாரமும் கூட செய்வதில்லை.

∴ ∴

ஒரு சமயம் எதிர்பிரசாரம் இல்லாவிட்டால் ஒருசமயம் இது அடங்கிப் போகுமோ என்று கேட்டாலோ அதுவும் முடியாத காரியமேயாகும். பார்ப்பனீயம் எப்படி மனிதன் உயிரோடு இருந்தாலும் விடுவதில்லை செத்துவிட்டாலும் விடுவதில்லையோ அதுபோல் நாத்திகம் என்பது இனி உலகில் சும்மா இருந்தாலும்விடாது. எப்படியும் மக்களை அது சுவாதீனம் செய்துதான் தீரும்.

∴ ∴

ஆனால் பார்ப்பனீயமும், மதமும் முதலில் மூடர்களைப்பிடித்து பிறகு அறிவாளிகளைப் பிடிக்கும் நாஸ்திகமோ அப்படி இல்லாமல் முதலில் அறிவாளிகளைப் பிடித்து பிறகு மூடர்களைப்பிடிக்கும்

∴ ∴

இந்த நாஸ்திகம் பெண்களைப் பிடித்த பிறகுதான் அதற்கு உச்சஸ்தானம் கிடைத்ததுடன் மக்களுக்கு சிறுகுழந்தைப்பருவமுதலேபாலோடு கூட நாஸ்திகமும் புகுத்தப்பட்டு வருகிறது.

∴ ∴

நாஸ்திகம் தோன்றக்காரணமே பெண்கள் கொடுமையும், ஏழைகள் கொடுமையும் ஒன்றுடன் ஒன்று கலந்து நாஸ்திகம் என்ற பிள்ளையைப்பெற்றுவிட்டது.

∴ ∴

1926-ம் வருஷத்தில் ரஷிய நாஸ்திக சங்கத்தில் சுமார் ஒன்றரை லட்சம்பேர்கள் இருந்தார்கள். 1928-ல் ஐந்து லட்சம்பேர் ஆனார்கள். 1929ல் இருபது லட்சம் ஆனார்கள். 1932-ல் ஒன்றரைகோடிபேர் ஆகிவிட்டார்கள் 1933 முடிவதற்குள் 2½ கோடிப் பேர் ஆகிவிடுவார்கள்.

∴ ∴

இனி அப்பாஎன்றாலும் முடியாது, ஐயா என்றாலும் முடியாது. இன்னும் பத்துவருஷகாலத்தில் உலகத்தில் நூறுகோடிப்பேர்கள் நாஸ்திகர்கள் ஆகித்தான் தீருவார்கள். தடிப்பேரிய வெறிகாரர்கள் தங்கள் முறையை கடைசியாக வைத்துக்கொள்ளலாம் என்பார்கள்-

∴ ∴

இவ்வளவுதானே ஒழிய இனி உலகில் நாஸ்திகத்தைத்தடுக்கவோ அழிக்கவோ சுயமரியாதைக்காரர்கள் நினைத்தாலும்முடியாது. அவர்கள்பாட்டன் ரஷியாக்காரர்கள் நினைத்தாலும் முடியாது.

∴ ∴

சுயமரியாதை பிரசாரத்தை 4-வருஷங்களுக்கு முன் பார்த்த— கேட்டறிந்த பாதிரிமார்கள் சுயமரியாதைக்காரர்களைப் பார்த்து வாழ்த்தினார்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெற ஆசீர்வதித்தார்கள் அவர்களது கடவுளை பிரார்த்தித்தார்கள். அவர்கள் இருக்கும் இடத்துக்குவந்து நன்றிசெலுத்திவிட்டுப்போனார்கள். தங்கள் பங்களாவுக்கு அழைத்து நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தி தேயிலைப்பான விருந்துகள் நடத்தினார்கள்.

∴ ∴

ஆனால் இப்போதோ அந்தப்பாதிரிகள் இருதலைக்கொள்ளிக்கு நடுவில் சிக்கின-புழு போல் துடிக்கிறார்கள் திகைக்கிறார்கள். பதைபதைக்கிறார்கள் இன்னது செய்வதென்று தோன்றாமல் பிரம்மித்து நிற்கிறார்கள். மற்றும் என்ன என்னமோ செய்யத் துணிந்துவிட்டார்கள்.

∴ ∴

ஆனால் இது ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு என்பதுபோல் அவர்களுடைய ஆத்திரத்தால் ஏற்பட்ட அறியாமையேயாகும்.

∴ ∴

ஏனென்றால் இந்தியா மொத்தத்திலும் உள்ள கிறிஸ்துவர்கள் 50 அல்லது 60 லட்சமேயாகும். இன்னும் ஒரு 5 அல்லது 10 லட்சம் கொசுரு சேர்த்துக்கொண்டாலும், தப்புக்கணக்கு போட்டாலும் 70 அல்லது 75 லட்சத்திற்குமேல் போகாது இவ்வளவும் சேர்ந்தாலும் லண்டன் பட்டணத்து ஜனத்தொகைக்கு சமானம் தான் ஆகும். இந்த இந்திய கிறிஸ்துவர்கள் எல்லோரும் நாஸ்திகர் ஆகிவிட்டாலும் (ஒரு நாளும் ஆகமாட்டார்கள் ஏனெனில் அவர்களுள் 100-க்கு 50 பேருக்கு மதத்தினாலேயே ஜீவனம் நடக்கின்றது) கூட ஒன்றும் முழுகிப்போய்விடாது.

∴ ∴

ஆகவே 40 கோடி ஜனசுகத்தை உடைய கிறிஸ்த்து மதம் ஒரு 40 லட்சம் இந்தியக்கிறிஸ்துவர்கள் நாஸ்திகர்களாகிறார்களே என்பதை முக்கியமாய் கவனிக்காமல் அவசர அவசரமாய் ஐரோப்பாவுக்கு ஓடுங்கள் என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது.

∴ ∴

ஏனெனில் அங்குதான் காட்டுத்தீ போல் நாஸ்திகம் பரவுகின்றது. அங்கு நாத்திகர்கள் ஆகும் அத்தனை பேரும் கிறிஸ்த்துவர்களேயாகும். ஆதலால் அங்கு சென்று இந்த ஆத்திரத்தைக்காட்டி அங்குள்ள கிறிஸ்துவர்கள் நாத்திகர்கள் ஆகாமல் பார்த்துக்கொண்டால் அதுபெருத்த லாபமாகும்.

தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க

குடி அரசு.

ஞாயிறு 1932 டிசம்பர்மீ 11-உ

தொழிலாளர்கள்.

—:0:—

முதலாளிகளுக்குத் தங்களது வாழ்நாளைப்பற்றிய கவலை என்பதே கிடையாது. மற்றபடி அவர்களது கவலை எல்லாம் தங்களுக்கு வேண்டியது போக மீதி இருப்பதை எப்படிப் பத்திரப்படுத்துவது, எப்படிப் பெருக்குவது, எப்படி சுகபோகங்களைப் பெருக்கி அனுபவிப்பது என்பவை போன்றவைகளைப் பொறுத்ததேயாகும்.

இவர்கள் வேலை செய்து அன்றாடகம் கூலி பெற்று ஜீவிக்கும் ஜனங்களைப்போல் நாளை சாப்பாட்டிற்கு என்ன செய்வது, வீட்டு வாடகைக்கு என்ன செய்வது, துணிக்கு என்ன செய்வது, குழந்தை பிறந்து விட்டதே அதற்கு வகை என்ன? அதற்கு பால் எங்கே? படிப்புக்குப் பணம் எங்கே? அதை எப்படி வளர்ப்பது? வியாதி வந்து விட்டதே! எப்படி தப்புவது? வைத்தியனுக்கு பணம் எங்கே? என்பது போன்ற கவலைகளை அவர்கள் அறிந்திருக்கவே மாட்டார்கள். இந்தகவலைகள் எல்லாம் தொழிலில் ஜீவிப்பவர்களைத்தான் பற்றிக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு தேசம் என்பது இருப்பதற்கே காரணமும் ஆதாரமும் தொழில் செய்யும் மக்களால்தானே தவிர வேறில்லை. இந்தமக்களின் தொழிலின் பயனை அனுபவிப்பதினால் தான் சிலர் முதலாளிமார்களாகி தங்கள் முதலாளி தத்துவம் நிலை நிற்கவும் பெருகவும் ஒரு அரசாங்கத்தை ஏற்படுத்தி அதற்கு ஓர் அரசனை ஏற்படுத்திக் கொண்டு தொழிலாளர்களை அடக்கி வைத்து வாழ்ந்து வருகிறார்கள். அரசனென்றால் ஒரு வேலையும் செய்யாமல் அநாவசியமான ஜீவனாய் இருந்துகொண்டு, வாரம் ஒன்றுக்கு பத்தாயிரம் பவுன் போல் உதவித்தொகையும், மேல்கொண்ட தனது முழுசெலவுக்கும் வேறுபணத்தொகையும் பெற்றுக்கொண்டு, தன்னுடைய கையெழுத்தை எங்கு வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் போட்டுக்கொள்வதற்கு முதலாளிமார்களுக்கு அனுமதி கொடுத்து தன் பெயரால் எதையும் செய்யும்படி விட்டுக்கொண்டும், சில சமயங்களில் முதலாளிமார்கள் சொல்லிக்கொடுத்ததை சொல்லிக்கொண்டு இருப்பவனே ஆகும். உண்மையிலேயே இந்தக்காரியம் தவிர மற்றெதுவும் தெரியாதவனையும் சிறிதும் சுயமரியாதை அற்றவனையும் தான் மிக நல்ல அரசர் என்று முதலாளிமார்கள் கொண்டாடுவார்கள். இளவரசர் என்பதும் இதே சங்கதியில் சிறிது குறைந்த அளவு கொண்டவர் என்பதைத் தவிர வேறொன்றுமில்லை.

இந்தக் கூட்டங்கள் தொழிலாளிகளிடம் அதாவது வேலை செய்து ஜீவனம் செய்யும் கூலி ஜனங்களிடம் மிக அன்பு இருப்பதாகக் காட்டிக்கொண்டு இவர்களுக்காக பரிதாபப்படுகிறவர்கள் போலவும் பேசிக்கொண்டு, தொழிலாளர் சங்கம் என்றும் பொது ஜன சேவை சங்கம் என்றும் ஏற்படுத்தி, அவைகளுக்குத் தாங்களே முழு நிர்வாகிகளாய் இருந்து கொண்டு அவர்களது கூலிக்காரத்தன்மையும், ஏழ்மைத் தன்மையும் நிரந்தரமாய் இருக்கவும், தாங்கள் மேலும் மேலும் முதலாளிகளாகி நிரந்தர பிடுக்களாக இருக்கவும் ஆன காரியங்களைச் செய்துகொண்டு தொழிலாளர்களை ஏமாற்றிக் கொண்டே வருவார்கள். இன்று இருந்துவரும் தொழிலாளர்கள் சங்கங்கள் தொழிலாளர்களை நசுக்கவும், எய்க்கவும் ஏற்பட்டவைகளேயாகும். இன்று உலகில் நடைபெறும் எல்லாவிதமான அக்கிரமங்களுக்கும், அநியாயங்களுக்கும் தொழிலாளிகள் பேரால் பொது ஜனங்கள் பாமர ஜனங்கள் பேரால் ஏற்பட்ட சங்கங்கள், கட்சிகள், ஆகியவைகளேயாகும். இவை ஒருபுறமிருக்க இச்சங்கங்கள் உண்மையாக தொழிலாளிகளுக்கும், பொது ஏழை ஜனங்களுக்கும் பாடுபட என்ற கட்சிகளையும் உண்மையாகவே உலகத்தில் தொழில் செய்து பிழைக்கும் மக்கள் ஆட்சிக்கு வேண்டும் என்று பாடுபடும் கட்சிகளாகிய சமதர்மக்கட்சி, பொதுவுடைமை கட்சிகளாகியவைகளையும் அழிக்கப்பாடுபடுகின்றன. அவைகளுக்கு நேர்விரோதமாகவே பாடுபடுகின்றன. தொழிலாளிகள் கூடி தங்கள் நலத்தை பெருக்குவதற்கும், தங்கள் கஷ்டத்தைக் குறைத்துக்கொள்வதற்கும் தங்கள் வேலைக்குத் தகுந்த கூலி கிடைப்பதற்கும் முயற்சி செய்யப்படும் வேலைகள் எல்லாம் சட்ட விரோதமானதாகப்பாவிக்கப்படுகிறது. தொழிலாளிகளை மோசம் செய்து அவர்களைவாட்டி இம்சித்து வேலை வாங்கி, வயிறாரக் கஞ்சிக்கும், இடுப்பாரத் துணிக்கும் வெயிலில், மழை மேல்படாமல் குடியிருக்க வீட்டுக்கும் வகை இல்லாமல் கொடுமைப்படுத்தி மோசம் செய்வது, சட்டசம்மதமாகக் கருதப்படுகிறது. தொழிலாளிகளை மோசம் செய்யும் முதலாளிகள் செயல்களை எல்லாம் தொழில் திறமையாகவும் நிர்வாகத்திறமையாகவும் கருதப்படுகிறது. முதலாளியைத் தொழிலாளி ஏமாற்றுவது நாணயக்குறைவானது, நம்பிக்கைத்துரோகமானது, திருட்டுக் குற்றத்தில் சேர்ந்தது என்பதாக ஆகிவிடுகின்றது. இதற்குக்காரணம் எல்லாம் முதலாளிமார்கள் ஆட்சி வலுத்திருக்கிறது, அவர்களுக்கு சங்கம் இருக்கிறது. அதற்கு அரசாங்கத்தின் சலுகை இருக்கிறது, அவர்களது நன்மைக்கு என்றால் உலக முதலாளிகள் எல்லாம் ஒன்று கூடி விடுகிறார்கள். முதலாளிகள் நன்மையில் ஒவ்வொரு முதலாளிக்கும் கவலை இருக்கிறது. அரசாங்கமும் அவர்கள் கைவசமிருக்கிறது. சட்டசபை அவர்கள் கைவசமிருக்கிறது. சட்டசபையில் 100க்கு 90 பேர் அவர்கள் இனத்தவர்களாகவே, அவர்களைத் தழுவி ஆதரிப்பவர்களாகவே சேர்ந்து விடுகிறார்கள். ஆனால் தொழிலாளிகளுக்கோ உண்மையான சங்கம் என்பது இல்லை. ஒற்றுமையென்பது இல்லை. தக்கபிரதிநிதித்துவம் என்பதில்லை. ஒன்றுபடக் கவலையும் இல்லை, மார்க்கமும் இல்லை. தொழிலாளிகளை முதலாளிகள் தங்கள் நன்மைக்கு உபயோகித்துக் கொள்ளுகிறார்கள். தொழிலாளிகளை ஆயுதங்களாகக் கொண்டுதான் முதலாளிகள் ஒருவரோடொருவர் யுத்தம் செய்து கொள்ளுகிறார்கள். இரண்டு முதலாளிகள் சண்டை போட்டுக்கொள்ளுகிறார்கள். இரண்டு முதலாளிகள் சண்டை போட்டுக்கொள்வதின் பயன் தொழிலாளிக்குத்தான் நஷ்டமாகவும் உயிர் பலியாகவும் முடிகின்றதே தவிர முதலாளிகளுக்கு ஒன்றும் நஷ்டம் இல்லை. சரீரத்தில் வேலை செய்யாத சோம்பேறி அன்னியர்கள் உழைப்பில் வாழ்கின்றவன் ஆகியவர்களுக்கே தொழிலாளிகள் ஓட்டுக்கொடுத்துத் தங்கள் பிரதிநிதியாக ஆக்கிக்கொள்ளுகிறார்கள். பிறகு இந்த சோம்பேறிகள் ஊரார் உழைப்பில் வாழ்கின்றார்கள், தொழிலாளிகளின் பிரதிநிதிகளாய் ஆனவுடன் முதலாளிகளாகவே ஆகப்பார்க்கின்றார்கள். அநேகர் முதலாளிகளாகவே ஆகிவிடுகிறார்கள். அநேகர் முதலாளிகளுக்கு உளவாளிகளாயிருந்து தொழிலாளிகள் நலத்தை விற்று தொழிலாளிகளைக் காட்டிக்கொடுத்துத் தாங்கள் வாழ்கிறார்கள்.

சரீரத்தில் பாடுபடுகின்றவன் தவிர, வேறு யாரும் தொழிலாளிகளுக்குப் பிரதிநிதியாக இருக்கக்கூடாது. எந்த சபையிலும் தொழில் செய்பவனே தொழிலாளர் பிரதிநிதியாக இருக்கவேண்டும். உலகின் சகல துறைகளைச் சேர்ந்த ஆட்சிகளும் தொழிலாளர்கள் கைக்குள்ளாகவே வரவேண்டும். அப்படிப்பட்ட ஆட்சிதான் தகும், அப்படிப்பட்ட ஆட்சிதான் பொதுஜன ஆட்சியாகும். அப்படிப்பட்ட பொதுஜன ஆட்சி என்பது, உலகப் பொது ஜனங்கள் நன்மைகளை எல்லாம் கருதியதாக இருக்கவேண்டும். அப்படிக்கில்லாமல் ஒரு தேசத் தொழிலாளிகள் மாத்திரம் அந்த ஆட்சி பெற்றால் போதும் என்பது தற்கொலையேயாகும். அதனால் உலக தொழிலாளர் கஷ்டம் நீங்காது. மற்ற தேசத்தொழிலாளர் கஷ்டம் அதிகரிக்கும். உலக தொழிலாளர் யாவருமே விடுதலை பெற்று ஆட்சிபெறும் மார்க்கந்தான் நிரந்தரமான நன்மையைக் கொடுக்கும். இல்லாதவரை மற்ற தேச முதலாளிகள் ஒன்று சேர்ந்து தனித்தேச தொழிலாளர் ஆட்சியை அழிக்கப்பார்ப்பார்கள்.

உலகில் வேலை செய்பவர்களைத் தவிர மற்றவர்கள் இருக்கக்கூடாது. ஒருவர் சௌக்கியமாயிருக்க மற்றவன் கஷ்டப்படுவது, பட்டினி கிடப்பது ஜீவனத்திற்கு மார்க்கமில்லாமல் திண்டாடுவது, என்கின்ற நிலைமை எங்கிருந்தாலும் அவைகள் ஒழிக்கப்பட வேண்டும். அவைகளுக்குக் காரணமானவைகள் வேருடன் அழிக்கப்படவேண்டும்.

யந்திரங்களால் ஏற்பட்டது சரீரங்களால் கஷ்டப்படும் மக்களின் கஷ்டத்தைக் குறைத்து வேலைகளை சுளுவாகவே ஒழிய மற்றபடி வேலை செய்யும் ஆட்களைப் பட்டினி போட்டுவிட்டு முதலாளிகள் கொள்ளை லாபம் சம்பாதித்து பணம் சேர்ப்பதற்காகவல்ல என்பதை பொதுஜனங்களும் முதலாளிகளும் உணரவேண்டும். யந்திரங்கள் வேலை செய்வதால் ஏற்படும் லாபம் ஏராளமாய் இருக்கும் போது, பொது ஜனங்கள் ஏன் பட்டினி கிடக்க வேண்டும். யந்திர லாபத்திற்கு

விதிக்கப்படும் வரிகள் உத்தியோகஸ்தர்கள் சம்பளக்கொள்ளைக்கும், அரசர்கள் அதிகாரவர்க்கக்காரர்கள் அனுபவக் கொள்ளைக்கும் மக்களை அடக்க என்று வளர்க்கப்படும் பட்டாள செலவுக்குமே போய் விடுகிறதே தவிர, பட்டினி கிடந்து சாகும் மக்களைப் பற்றிய கவலையே கிடையாது. அரசாங்கம் தொழிலாளிகளுடையதாகுமானால், பொதுஜனங்களுடையதாகுமானால் இந்த யந்திரசாலை லாபமெல்லாம் பொது ஜனங்களுக்குக் கிடைக்கும், தொழில் செய்பவர்களுக்கெல்லாம் [வேலை நேரத்தைக் குறைத்து வேலையைப் பங்கிட்டுக்கொடுத்து ஜீவனத்திற்கு வேண்டியதைக் கொடுக்கமுடியும். முதலாளிகள் வசம், முதலாளிகள் ஆதிக்கத்தில் ஆட்சி இருக்கும்வரை ரூபாய்க்கு 5 ரூபாய் லாபம் கிடைக்கும்படியான தொழிலாயிருந்தாலும் அவை முதலாளி வர்க்கத்திற்கும் அதிகார வர்க்கத்திற்கும் தான் கொள்ளை போகுமேயொழிய ஒருநாளும் தொழிலாளி வர்க்கம் தாராளமாய் ஜீவிக்கப்பயன்படாது. இந்த சுவல்ப்ப யந்திரத்தின் பயனாகவே இத்தனைபேர்கள் பட்டினிகிடக்கிறார்களென்றால் இனியும் அதிகமாக எத்தனையோ மாதிரியான யந்திரங்கள் ஏற்படப்போகின்றது என்று சொல்லிக் கொள்ளப்படுகிறது போல் வற்பட்டால், அப்போதைய நிலை என்னாகும் என்பதை யோசித்துப்பாருங்கள். வேலையாளுக்கு வேலையில்லை ஆனதினால் யந்திரங்கள் வேண்டாம் என்று சொல்லுவதா, அல்லது யந்திரத்தின் வேலை சுளுவின் பயனை வேலையாட்கள் அனுபவிக்கவேண்டுமேதவிர முதலாளி வர்க்கம் கொள்ளை அடிக்கக் கூடாது என்பதா என்பதைப் பற்றியோசித்துப்பாருங்கள். அதிகாரிகள் அடிக்கும் கொள்ளையை நிறுத்தவேண்டுமானால் முதலாளி ஆதிக்க அரசாங்கத்தைக்கவிழ்க்க வேண்டும். அப்பொழுதுதான் உலக எல்லா மக்களும் சுகமாக வாழலாம்.

தொழிலாளர் ஆட்சி செய்யும் அரசாங்கம் நடக்கும் ரஷியாவைப்பாருங்கள். அங்கு யந்திரங்கள் தினத்திற்கு தினம் பெருகி, ஒவ்வொருயந்திரசாலைகளிலும் பத்தாயிரம், இருபதாயிரம், முப்பதாயிரம் ஆணும், பெண்ணும் சரி சமமாகவேலை செய்கிறார்கள். அங்கு ஒருவருக்குக்கூட வேலையில்லை என்று சொல்ல முடியாது, ஒருவராவது பட்டினி கிடக்கிறார்கள் என்று சொல்ல முடியாது, ஒருவருக்காவது நாளைக்கு என்ன செய்வது என்ற கவலையே கிடையாது. ஓ தேசியவாதிகளே! இதற்கென்னபதில் சொல்லுகிறீர்கள்.

ஈ. வெ. ராமசாமிக்கு சுயமரியாதை இளைஞர்கள் உபசாரம்.

T. D. கோபால் தலைமை வகித்தார்.

சென்ற 7-12-32ல் மாலை 6 மணிக்கு ஈரோடு மகாஜன ஸ்கூல் சரஸ்வதி ஹாலில் சுயமரியாதை இளைஞர்களால் தோழர் ஈ. வெ. ராமசாமிக்கு உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுப்பதற்கென ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்திற்கு வியாபாரிகளும், மாணவர்களும், வாலிபர்களும், அபிமானிகளும் ஆக 500க்குமேற்பட்டோர் விஜயஞ்செய்திருந்தார்கள்.

தோழர் கோபால் அவர்களை கூட்டத்திற்குத் தலைமை வகிக்கும்படி தோழர் என். பி. காளியப்பன் அவர்கள் பிரரேபிக்க தோழர் அ. ரத்தினசபாபதி அவர்களால் ஆமோதிக்கப்பட்டு, தலைவர் ஸ்தானத்தமர்ந்து முகவுரையாக சுயமரியாதை இயக்கம் செய்துள்ள வேலைகளைப் பற்றியும், உயர்வு தாழ்வுக்கொடுமையைப் பற்றியும், வாலிபர் கடமையைப் பற்றியும் பேசியமர்ந்த புன்னர், தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களுக்கு இளைஞர்கள் சார்பாக தோழர் ரத்தினசபாபதி அவர்களால் ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது.

தோழர் இரத்தினசாபதி அவர்கள் பேசுகையில் தற்கால வாலிபர்களது மனப்பான்மை மாறிவருவதாயும் பழங்காலக்கொள்கைகளை எவ்வாற்றேனும் ஏற்க மறுத்து வருவது கண்கூடு என்றும், தளராத ஊக்கத்துடன் வாலிபர்கள் முன்னணியில் நின்று தீவிரமாய் உழைக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார். பின்னர், தோழர் அ. இராகவன் அவர்கள், முதலாளி தொழிலாளி என்ற வித்தியாசங்கள் நாட்டிடை இல்லாது ஒழிய வேண்டுமென்றும், இத்தகய உயர்வு தாழ்வு வித்தியாசங்களுக்கு மதப்பற்றும், கடவுளுணர்ச்சியுமே காரணங்கள் என்றும், தெளிவுபட விளக்கினார்.

தோழர் ஈ. வெ. ராமசாமி பத்திரத்துக்கு பதிலளித்து சுமார் 1-30 மணிநேரம் வரை, சுயமரியாதை இயக்கக் கொள்கைகளை விளக்கியும், புரட்சி என்பதன் அர்த்தமென்ன என்பதைப் பற்றியும், நாம் இனி செய்யவேண்டிய வேலை என்ன என்பது பற்றியும் பேசினார். (முழு விபரம் அடுத்த வாரம் வெளிவரும்) தலைவரது முடிவுரைக்குப் பின் தோழர் காளியப்பன் அவர்களால் வந்தனம் கூறப்பட்டு கூட்டம் முடிந்தது.

மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாடும் அதன் வேலைத்திட்டமும்.

அறிக்கை நெ. 3.

சுயமரியாதைத்தோழர்களே!

சிறப்பாக சென்னை மாகாணத்தில் சுமார் பதினாறு ஆண்டு காலமாக பார்ப்பனரல்லாதாரின் சமூக சமுதாய அரசியல் இயலில் முன்னேற்றம் பெறவேண்டுவான் பொருட்டு விடாமுயற்சியுடன் இராப்பகலாய் நம் தலைவர்கள் பாடுபட்டு வந்ததின் பயனாக அரசியல் துறையில் சற்று முன்னேற்றமடைந்திருப்பினும் பொதுவாக சமூக துறையில் நாளுக்குநாள் மிகவும் மோசமான நிலைமையை அறிந்தும் முக்கியமாக பாமர மக்கள் அறியாமையின் காரணமாக மக்களுக்கு மக்கள் அடிமைப்பட்டிருப்பதிலிருந்து விடுதலை பெறுவதுதான் முக்கிய பிரச்சினையாகக்கொண்டு அஞ்சா நெஞ்சத்துடன் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் "சுயமரியாதை" என்னும் ஒரு இயக்கத்தை தோற்றுவித்து அது முக்கியமாக வர்ணாச்சிரம கோட்டையான தமிழ் நாட்டில் பொது மக்களிடையே பிரசாரம் செய்யப்பட்டுபெரிதும்ஆதரவுபெற்று வந்திருப்பது எவரும் மறுக்க முடியாத விஷயமாகும். இவ்வியக்கம் தோற்றுவித்து சுமார் ஏழு ஆண்டுகளாகின்றன. நாடெங்கனும்தாலூகா மகாநாடுகளும், ஜில்லா மகாநாடுகளும், மாகாண மகாநாடுகளும்கூடி அறியதொண்டாற்றி வந்திருப்பது யாவரும் அறிந்த விஷயமாகும். மதுரை ஜில்லா சம்பந்தப்பட்ட வரையில் பிரசாரத்தின் வாயிலாக பெரிதும் தொண்டாற்றி வந்திருப்பினும் அது காரியாம்சத்தில் நடாத்தி காட்டவேண்டுமென்பதே தயாகும். உதாரணமாக முதல் முதல் சுமார் ஆறு ஆண்டுகளுக்குமுன் நம் சுயமரியாதை இயக்கத்திற்கு பெரும் முட்டுக்கட்டையாக இருந்த மனுதர்ம சாஸ்திரத்தின் வேறு பாடுகளை மக்களிடையே துண்டுப்பிரசுரங்கள் மூலமாகவும் பிரசார வாயிலாக எடுத்துக்காட்டியும் இம்மதுரை நகரில் நம் இயக்கத்தின் மாபெரும் தோழர் உத்தமபாளையம் எம். டி. சுப்பிரமணியம் அவர்கள் தலைமையின் கீழ் கூடிய பொதுக்கூட்டத்திலும் மேலே கண்ட மனுஸ்மிருதியை தீக்கிரையாக்கி இருப்பதும், மதத்தின் பேரால் உள்ள மூடப்பழக்க வழக்கங்களையொழிப்பதற்கான முயற்சிகளோடிருந்துவந்தது. பிறகு அதற்கானசட்டதிட்டங்களை நிர்மாணிக்கவேண்டுமென்ற நோக்கத்தோடு ஏற்படுத்தியநமது மதுரைசுயமரியாதை சங்கத்தின்நோக்கங்களாவன:—மக்கள்பிறவியில் உயர்வு தாழ்வு கற்பித்துவரும் ஜாதி மத நிற வேற்றுமைகளை ஒழித்தல், ஜாதி வித்தியாசத்தினால் ஏற்பட்டுள்ள தீண்டாமையும் சமூக குருட்டு பழக்க வழக்கங்களையும் ஒழித்தல், ஆண் பெண் என்ற வித்தியாசத்தை நீக்கி பெண்களுக்கும் கல்வி சொத்துரிமைகளை வழங்குவதும், விதவா விவாகம், கலப்பு மணம், விவாக ரத்து, முதலியவைகளை யாதரித்து, பால்ய விவாகத்தை தடுத்தல் ஏழை பணக்காரன் முதலாளி தொழிலாளி என்ற வித்தியாசங்களை போக்கி சமதர்மத்தை பரப்புதல்.

மக்களுடைய முன்னேற்றத்திற்கும் அறிவு வளர்ச்சிக்கும் கடவுள் உணர்ச்சி தடைப்படுத்துவதால் அவ்வுணர்ச்சியை ஒழித்தல் என்பதான திட்டங்களை நிர்ணயித்து மேலே சொன்ன சாதி, மத வித்தியாசத்தை அறவேயொழிப்பதற்கு அடிப்படையான சமபந்தி விருந்து மாதம் தோறும் நடாத்தி வந்திருப்பதும், புரோகிதம் முதலான மூடப்பழக்க வழக்கங்கள் அறவேயொழிந்த அநேகதிருமணங்கள் நடாத்தியும் கடவுள் உணர்ச்சி ஒழிப்பதற்கான மாதம் தோறும் வெளியீடுகள் பிரசுரித்தும், வாரம் தோறும் கிராமங்களில், ஆதி திராவிடர்கள் வசிக்கும் ஸ்தலங்களில் சுயமரியாதைப் பிரசாரங்கள் செய்தும் மற்றும் அரசியல் துறையிலும் சமதர்ம கொள்கை பரப்பவேண்டுவான் பொருட்டு தொண்டாற்றி வந்திருப்பதும் யாவரும் அறிந்ததே. இந்நிலைமையில் மதுரையில் முதலாவதாக மதுரை ஜில்லா சுயமரியாதை மகாநாடு அடுத்த ஜனவரி மாதம் 2-வது வாரத்தில் நடைபெறவிருக்கிறது. மகாநாடுகூடும் நாள் மிகவும் சொற்பமாக இருப்பதால் நமது மதுரை ஜில்லாவாசிகள் தங்கள் தங்கள் தாலூகா கிராமங்களில் உள்ள குறைபாடுகள் தீர்மான மூலமாக ஒரு வாரத்திற்கு முன்னதாக மகாநாட்டு காரியதரிசிக்கு அனுப்பும்படி கேட்டுக்கொள்வதோடு மகாநாடு விஷயமாய ஆங்காங்கு நம் இயக்கதோழர்கள் கிராமப் பிரசாரங்கள் செய்து மகாநாடு சீரும் சிறப்புடன் நடைபெறவேண்டுகிறோம். நம் இயக்கம்கண்ட தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் முன்னதாக மாகாண கமிட்டியார் கூடி இனி நடத்தப்போகும் வேலைத்திட்டம் நிர்மாணிக்கப்போவதாக குடி அரசில்

திருவையாறு ஓரியன்டல் காலேஜ்.

தவளையும் சேர்ந்து வெந்த சோறு.

தஞ்சை ஜில்லா திருவையாற்றில் தமிழ் சமஸ்கிருதம் முதலிய மொழிகள் வளர்ச்சிக்கென்று தஞ்சாவூர் ராஜாக்களால் ஒரு கலாசாலை ஏற்படுத்தப்பட்டு, ஏராளமான சொத்துகளும் கொடுக்கப்பட்டு இப்பொழுது, ஓரியண்டல் காலேஜ் எனும் பெயர் வழங்கிவருகிறது. அதில் அநேக பார்ப்பனரல்லாத மாணவர்கள் படிக்க வருகிறார்கள். அங்கு படிக்கும் எல்லாமாணவருக்கும் இலவசக் கல்வியுடன் இலவசச் சாப்பாடுமளிக்கப் படுகிறது. சென்ற சில ஆண்டுகளாக காலேஜில் முக்கிய அதிகாரியும் ஒரு பார்ப்பனர். அந்த கலாசாலையை மேல் பார்த்தும் வருகிறதும் ஒரு பார்ப்பனர். அதாவது தஞ்சை ஜில்லாபோர்டுத் தலைவர் தோழர். சுப்பிரமணியய்யர். அன்னார் ஜில்லா போர்டு தலைவரான அந்தஸ்தில் கலாசாலையின் மேல்பார்வையை வகித்த பின்னர், அங்குள்ள தமிழ் மாணவர்களில் சௌரியக் குறைவு அதிகம் ஏற்பட்டது.

அய்யர் வந்த பிறகு, பிள்ளைகளுக்கு சாதம் சாப்பிடுவதற்கு கொடுத்து வந்த இலையை நிறுத்தி விடப்பட்டது. திருவையாறில் இலை அதிக மலிவு. மேலும் இலையில் சில வழிவது மிகவும் குறைவு.

தோழர் அய்யர் மேல்பார்வை வகித்த சில மாதங்களுக் கெல்லாம் பார்ப்பனரல்லா மாணவர்களுக்குத் தயாரித்திருந்த சாதத்தில் ஒரு பல்லி வெந்து கிடந்தது. அதைக் கவனியாமலும், கவனித்த பின்பு சட்டை செய்யாமலும் அச்சாதத்தையே மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

சில தினங்கள் முன்னால், பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு அன்னம் படைத்த காலத்தில் சாதத்தில் வெந்து கிடந்த ஒரு தவளையில் அங்கங்கள் காணப்பட்டன. இச்செய்தியை மாணவர்கள் தலைமை உபாத்தியாயரிடம் விண்ணப்பம் செய்து, அவர் பரிகாசம் செய்து, தவளை செத்துவெந்து கிடந்ததற்காக சமைத்த சாதத்தை எறிந்துவிட முடியாதென்றும், உண்ண இஷ்டமில்லாதவர்கள் அவரவர்கள் ஊருக்குத் திரும்பிப் போகலாமென்றும் சிறிதும் கவலையின்றி உரைத்தாராம். என்ன கொடுமை! உண்ணும் உணவிற்கும் கேடு

சில காலத்திற்கு முன் ஈரோட்டில் ஒரு ஹாஸ்டலில் அருணை வெந்து கிடந்த சாதத்தை உண்டகாரணத்தால் 30 மாணவர்கள் உயிர் துறந்தனரென்று எங்கும் விசனமேற்பட்டது. அதுபோல் இங்கும் மாணவர்களின் சுகாதார நிலைக்கு மோசமாய் நடைபெறும் சமையல் பாகத்தையும் ஒழுங்கையும் கவனியாது கேலி செய்வதில் பொறுப்பாளர்களான அதிகாரிகள் ஆஸ்தைகொண்டால் அது மிகவும் வெறுக்கத்தக்கதுடன் மனிதத் தன்மையானதுமன்று. இது விஷயத்தில் மேல் பார்வையாளரான திரு. சுப்பிரமணியய்யர் ஒருவித நடத்தையுமெடுக்காது மௌனம் சாதிப்பது பார்ப்பனரல்லா மக்களிடம் அவருக்கு இருக்கக்கூடிய மனப்பான்மையை விளக்குகிறது.

ஆகையால் மாணவர்களின் நலத்தைக்குறுக்கி கவர்ன்மெண்டார் மேற்கூறிய விஷயத்தை ஆராய்ந்து பொறுப்பின்றி நடந்த அதிகாரிகளின் நடத்தையைக் கண்டித்து இனிமேல் இவ்வித புகார்கள் வராமல் தாக்கீது செய்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. "தமிழன்"

வெளியிட்டிருந்ததைக்கண்டு மகிழ்ச்சியடைகிறோம். அத்தகைய வேலைத்திட்டத்தை நமது மகாநாட்டு முன்பேயே கூட்டம்கூடி அத்திட்டத்தைக்கொண்டு நமது ஜில்லா மகாநாட்டில் நிறைவேற்றி காரியாம்சத்தில் நடாத்தவேண்டியிருக்கிறதென்பதை மாகாண கமிட்டி அங்கத்தவர்களை கேட்டுக்கொள்ளுகிறோம். ஏ. எஸ். ஆனந்தம் விளம்பர அதிகாரி.

ஈ. வெ. ராமசாமிக்கு மாணவர்கள் உபசாரம்.

—:0:—

4—12—32உ ஈரோடு மகாஜன ஸ்கூல், சுப்புராவ் ஞாபகார்த்த பந்தய விளையாட்டில் வெற்றி பெற்றவர்களுக்கு சன்மானம் வழங்கும் விழாவில் தலைமை வகிக்க வேண்டுமென்று மாணவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டதிற் கிணங்க, தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும் மற்றும் நண்பர்களும், அபிமானிகளும், பாடசாலை உபாத்திமார்களும், ஏராளமான மாணவர்களும், சுமார் 5மணி வரை விளையாட்டு ஸ்தலத்திலிருந்துவிட்டு, ஷை. ஸ்கூல் சரஸ்வதி ஹாலுக்கு எல்லோருமாகச் சென்றனர். பின்னர் ராமசாமி அவர்கள் தலைமை வகித்து டந்தயத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு சன்மானங்களளித்தார். தலைவரது வேண்டுகோளுக்கிணங்கி வக்கீல் தோழர் நரசிம்மாச்சாரி அவர்கள் "தேகாப்பியாசத்தின் அவசியம்" என்பது பற்றி விளக்கிப் பேசினார்.

பின்னர் மாணவர்கள் சார்பாக உயர்தர பாடசாலை மாணவரால் ஒரு உபசாரப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது.

தோழர். ஈ. வெ. ராமசாமி அவர்கள், தற்கால நம் நாட்டுக்கல்விமுறையைப் பற்றியும், மற்ற மேனாட்டு முறைகளைப் பற்றியும், மாணவர்கள் கடமையைப் பற்றியும், சுமார் ஒரு மணி நேரம் விரிவுரை நிகழ்த்தினார். (சொற் பெருக்கும், நிகழ்ச்சியும் அடுத்தவாரம் பிரசுரிக்கப்படும்) பின்னர், அப்துல்கனி அவர்களாலும், ஸ்ரீனிவாசராகவ அய்யங்கார் அவர்களாலும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

C. S. R. தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கோவை திவான்பகதூர் சி. எஸ். ரத்தினசபாபதி முதலியார் அவர்கள் கோவை ஜில்லா போர்டுக்கு ஒரு அங்கத்தினராக தெரிந்தெடுக்கப்பட்டார். இதுபோலவே சமீபத்தில் நடக்கப்போகும் கோவை ஜில்லாபோர்டு தலைவர் தேர்தலிலும் மறுமுறையும் அவர் தேர்ந்தெடுக்கப் படுவார் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

கோவைஜில்லாபோர்டு அங்கத்தினர்

கோவை ஜில்லாபோர்டிற்கு திரு, ஆண்டமுத்துக் கவுண்டரவர்கள் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

ஈரோடு தாலூகாபோர்டு தலைவர்

ஈரோடு தாலூகாபோர்டிற்கு மீண்டும் பழையகோட்டைப் பட்டக்காரர், நல்லதம்பிசக்கரைமன்றாடியார் அவர்களே அதிக ஓட்டுகளால் தலைவராக தேர்ந்தெடுக்கப்படுவாரென நம்பப்படுகறதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

(9-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்தியாவில் 10 பேர் நாத்திகரானால் கிறிஸ்துவர்கள் விகிதாச்சாரத்திற்கு கால் பேரைவிட கம்மியாகத் தான்வரும். ஐரோப்பாவில் 5-பேர் நாத்திகர்கள் ஆனால் அந்த ஐந்து பேரும் கிறிஸ்தவர்களேயாவார்கள், ஆதலால் பாதிரிகளுக்கு கிறிஸ்துவ மதத்தில் கவலை இருந்தால் உடனே ஐரோப்பாவுக்கு போவதே புத்திசாலித்தனமாகும்.

ஃ ஃ

ஏனெனில் ஐரோப்பாவில் தான் நாத்திகத்தை உலகமெங்கும் பரப்ப திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன. அந்தப்படி வேலைகளும் நடைபெறுகின்றன. அவையாவன.

1. சகல மதங்களுக்கும் விரோதமாகவே மதங்களின் போலித்தன்மைகளை விளக்கி பிரசாரம் செய்ய வேண்டும்.

2. சகல நாடுகளிலும் வேலையில்லாமல் திண்டாடுபவர்களை தாழ்த்தப்பட்டவர்களை அவரவர்கள் மதங்களில் இருந்து விடுபடும்படி செய்ய வேண்டும்.

குழந்தைகள் மனத்திலும் வாலிபர்கள் மனத்தில் மதப்பித்து விதைகள் விதைக்கப்படாமலும் பார்த்துக் கொள்ளவேண்டும்.

சினிமா நாடகம் சம்பாஷணை வியாசம் முதலியவை எல்லா பாஷைகளிலும் உண்டாக்கி உலக முழுதும் பரப்ப வேண்டும்.

எல்லாமத பொய் தத்துவங்களும் விளக்கத்தக்கதாக ஒரு சகல கலா ஞானம் (என் சைக்ளோபிடியா) புத்தகம்) வெளியிடவேண்டும். இன்னும் என்ன என்னவோ என்பவையாகும்.

ஃ ஃ

எனவே இப்படிப்பட்ட பிரசாரம் உலகமெல்லாம் நடக்கும்போது சண்டமாருதத்தைத்தடுக்க சுண்டுவிரலைக்காட்டியதுபோல் எங்கோஒரு மூலையில் உட்கார்ந்துகொண்டு வெறும் பிரார்த்தனையாலும்; வெறும்வசவுஒப்பாரியினாலும் தடுத்துவிட முடியுமா?

பரிதாபத்திற்குறிய இந்த மக்களுக்கு "ஆண்டவன் அருள் துணை செய்வாராக"

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-ஞு O. S. No. 498.

1932ஞு I. A. No. 916

வெ. வீர. வீரப்ப செட்டியார் (Died) Bank by partner & agent வள்ளியப்ப செட்டியார் —வாதி.

பல்லடம் தாலூகா கருமத்தம்பட்டி கிராமம் எளிச்சிபாளையத்திலிருக்கும் ஆலாங்காடு பெரிச்சிய கவுண்டன் மகன் சின்னியகவுண்டன் 1, ஷையூரிலிருக்கும் 1ம் பிரதிவாதி மகன் ராம கவுண்டன் 3, —1, 3 பிரதிவாதிகள்.

ஷை 1, 3 பிரதிவாதிகளுக்கு இதனால் தெரிவிப்பதென்னவென்றால், உங்கள் வகையறா பேரில் பிராம்சரி நோட்டுப்படி ரூபாய் 1021-6-0க்கு தாவா செய்து 1932-ஞு டிசம்பர் மாதம் 21உ வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை கேம்பரில் உங்களுக்குப்பாத்தியப்பட்ட சொத்துக்களை உடன் ஜப்தி செய்யவேணுமாய் மனுக்கொடுத்து ஷை மனுவின் பேரில் நோட்டீஸ் கொடுத்து ஷை மனுவும் 1932-ஞு டிசம்பர் மாதம் 21 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீங்கள் காலை 10 மணிக்கு ஆஜராகி உங்களுக்கேதாவது ஆக்ஷேபணையிருந்தால் தெரிவித்துக்கொள்ள வேண்டியது. இல்லாத வரை ஒரு தலைப்பட்சமாக விசாரித்து தீர்ப்பு செய்யப்படும் என்ற சங்கதி அறியவும்.

M. K. Govindarajulu Chettiar,
Counsel for Pletf.

Tirupur 5-11-32.

(7-ம் பக்கத்தொடர்ச்சி)

தங்கள் உடல் நலிவைப் போக்க வென்பது ஒருபுறமிருந்தாலும், மேல் நாட்டில் ஆங்காங்குள்ள தற்கால நிலைமைகளைக் கவனித்து வரவே யென்றும் எண்ணுகிறோம்.

இப்போதய நெருக்கடியான நிலையில் சாதாரண பாமர மக்களை நடத்திச் செல்ல தாங்கள் போன்றாரது தலைமைப் பதவியை இந்தியா எதிர்பார்க்கிறது.

இந்நாட்டில், நினைக்கமுடியாத கொடுமைகளுட்பட்ட எந்த தீண்டாதார் என்பவர்களுக்காகத் தாங்கள் முன்னணியில் நின்று வேலைசெய்தீர்களோ, அவர்களுக்குச்சிலஅனுகூலங்கள் ஏற்படும் அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆனால் இவையெல்லாம் அடையவேண்டிய லட்சியத்தின் முதற்படியே யாகும். மற்ற துறைகளில் அவர்களுக்காகச் செய்யவேண்டியது அனந்தம் இருக்கின்றன. முதிர்ந்தஅனுபவமும், பாரபட்சமற்ற தன்மையும் கொண்ட தாங்கள் போன்றார்களாலே தான் அவர்களுக்கு ஏதாவது விமோசனம் செய்யக்கூடும். ஏற்கனவே உள்ள தங்களது பரந்த நோக்கத்தை, மேனாட்டுச் சுற்றுப் பிரயாணம் இன்னும் அதிகமாக்கி இருப்பதாகவே நாங்கள் நம்புவதோடு, தங்களது அறிவும் அன்பும் நிறைந்த ஆலோசனை எங்களுக்கூட்டி, எப்போதும் எங்களுக்கு உதவி செய்ய தாங்கள் இன்னும் பன்னுள் திடகாத்திரத்தோடு திகழ்வீர்களென்று நம்புகிறோம்.

பிறகு பெருத்த கரகோஷத்தினிடையில் தோழர் ஈ. வெ. இராமசாமி எழுந்து பேசியதின் சாரமாவது;-

ஈரோடு முனிசிபல் சேர்மென் அவர்களே, ஸ்கூல்போர்ட் காரியதரிசி அவர்களே!! மஹாஜன ஸ்கூல் ஹெட்மாஸ்டர் அவர்களே,

தாங்கள் வாசித்துக்கொடுத்த உபசாரப் பத்திரத்திற்காக நான் பெருமைகொள்ள வேண்டியவனும் நன்றி செலுத்தவேண்டியவனுமாவேன். ஆனால் இவைகளை எனக்கு நானே செய்துகொண்டதுபோல் கருதினேனேயானால் இதனால் ஒரு மகிழ்ச்சியும் நன்றிசெலுத்தவேண்டிய அவசியமும் எப்படி ஏற்படும்.

ஏனெனில் இந்த ஊரில் உள்ள மிகப் பழமையான ஸ்தாபனங்களான இம்மூன்றும் அவைவேறு நான்வேறு என்று பிரிப்பதற்குமுடியாத மாதிரியில் ஒன்றில் இருந்து வருகின்ற ஸ்தாபனங்களல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள். அவற்றின் நிர்வாகிகளாகிய தாங்களும், மற்றும் தங்கள் சகாக்களும் சகோதரர்கள் போன்ற நெருங்கிய அன்பர்களாய் இருக்கிறவர்கள அல்லவா என்பதை யோசித்துப்பாருங்கள். ஆகவே இப்படிப்பட்ட நிலையில் அளிக்கப்படும் மரியாதைகளை நான் எப்படிப் போற்றக்கூடும், எப்படி அரியதென்று எண்ணக்கூடும்? என்றாலும் தாங்கள் எல்லோரும் என்னை உற்சாகப்படுத்தவும் என்னிடம் வேலை வாங்கவும் உங்களுக்கு இருக்கின்ற அவாவை காட்டுவதற்கு ஆக பயன்படுத்திக்கொண்ட ஆயுதங்கள் என்றே கருதி அந்தப்படியே நடக்கிறேன் என்பதாக உறுதி கூறுவதைத்தான் உபசாரத்திற்குப் பதிலாகவும் நன்றி கூறுவதாகவும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தோழர்களே, உங்கள் உபசாரப்பத்திரங்களில் கண்டுள்ள புகழ்ச்சிவாக்கியங்கள் என்னை சந்தோஷிக்கச்செய்யவில்லை. அதற்குப் பதிலாக என்னை வெட்கப்படவே செய்தது. ஏனெனில் அந்தப்படி அளவுக்குமீறி புகழ்ந்துகூறி இருக்கிறீர்கள். என்றாலும் அவற்றில் சுயமரியாதை இயக்கத்தையும் சமதர்மக் கொள்கைகளையும் குறிப்பிட்டுப் பாராட்டி இருப்பதில் நான் மிக மிக திருப்தியும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இவ்விரண்டு விஷயங்களும் இப்போது நமது நாட்டில் சிலருக்கு எருதுகளுக்கு முன்னால் சிகப்புவேஷ்டியைப் போட்டால் அது எப்படி மிரண்டு துள்ளித் துள்ளிக் குதிக்குமோ அதுபோல் ஒரு விஷயத்தையும் நடுக்கத்தையும் கொடுத்திருக்கிறது. அதனால் எவ்வளவோதூரம் தங்களை மறந்து கண்டபடி பேசுகிறார்கள். இப்படிப்பட்ட பேச்சுக்கள் எல்லாவற்றையும் ஒரே அடியாய் நான் அலட்சியம் செய்து விடுவதில்லை. சிலவற்றைப்பற்றியாவது நான் சிந்திப்பதுண்டு. அப்படி சிந்திப்பதில் நான் மயங்கத்தக்க விஷயம் ஒன்றும், எட்டாவிட்டாலும் அப்படிப்பட்ட நபர்களில் இதை உத்தேசித்து பார்க்கின்றபோது ஒருசமயம் நமது லட்சியங்கள் மக்களுக்கு ஏதாவது கெடுதி அளிக்கக்கூடியதோ என்கின்ற எண்ணம்தோன்றி அயரச்செய்வதுண்டு. ஆனால் அப்படிப்பட்ட அயர்வுகளைப் போக்கும் ஒப்பற்ற மருந்துபோல் உங்கள் உபசாரப் பத்திரம் வாங்கியங்கள் காணப்படுகின்றனர்.

அப்படிப்பட்டவர்களுடைய கூப்பாடுகளுக்கும் ஆவலாதிகளுக்கும் தக்க சமாதானங்கள் உங்கள் பத்திரங்களில் இருக்கின்றன. அதுமாத்திரமல்லாமல் அவைகள் இயற்கைதான் என்றும் அவற்றில் சிறிதும் லட்சியம் செய்யக்கூடாதென்றும் கண்டுள்ள தைரிய வார்த்தைகளை நிரம்பிக்கிடக்கின்றன. ஆகவே அவற்றிற்காக நான் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டவன்.

இந்தச் சமயத்தில் நான் ஏதாவது சில வார்த்தைகள் சொல்லவேண்டுமென்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள் என்று எனக்குத் தெரிகிறது. நான் எதைப்பற்றி பேசக்கூடும்? ஸ்தல ஸ்தாபனங்கள், கல்வி என்கின்ற இரண்டு விஷயங்களைப்பற்றிப் பேசுவதே பொருத்தமுடையது என்று கருதுகிறேன்.

தோழர்களே!

நமது நாட்டு ஸ்தலஸ்தாபனங்கள் என்பதானது நாட்டுமக்களின் நன்மைக்கு ஏற்பட்டது என்று சொல்லப்பட்டாலும் அவற்றின் நிர்வாகப் பரிபாலனமானது சுதந்தரமானது நாட்டுமக்களின் கையில் ஒப்படைக்கப்பட்டிருப்பதாய் கூறப்பட்டாலும், அவைகள் எல்லாம் உண்மையான நாட்டுமக்கள் நலனுக்கு நடப்பதாகவும், உண்மையான நாட்டுமக்கள் கைக்கும் வந்திருப்பதாகவும் ஒரு சிறிதும் கூறமுடியாது. நாட்டுமக்கள் என்றால் யார்? நாட்டுமக்களைமாத்திரம் அல்லாமல் உலக மக்களையே இரண்டுவிதமாகத்தான் பிரிக்கலாம்.

ஒருபிரிவில் 1. செல்வான்கள் 2. முதலாளிகள் 3. மிராசுதாரர்கள் 4. பெரிய வரும்படியுள்ள உத்தியோகஸ்தர்கள், புரோகிதர்கள், படிப்புள்ளவர்கள் போன்றவர்கள் அடங்குவார்கள். மற்றொரு பிரிவில் 1. ஏழைகள் 2. தொழிலாளிகள் 2. பயிரிடும் குடியானவர்கள், 4. கூலியாட்கள் இம்மாதிகள் கீழ்ஜாதிக்காரர்கள் பாமரர்கள் போன்றவர்கள் அடங்குவார்கள், முதல் வகுப்புப் பிரிவில் மொத்த ஜனங்களில் 100 க்கு 10 பேர்களுக்குள் அடங்கிய எண்ணிக்கையுள்ளவர்கள் இருப்பார்கள், பிற்பட்ட வகுப்பில் 100 க்கு 90 பேர்களுக்குமேல் இருப்பார்கள்.

ஆகவே மேற்கண்ட இரண்டு வகுப்புகளுக்கு பிரதிநிதிகள் யாராயிருக்கிறார்கள். மேற்கண்ட ஸ்தாபன நிர்வாகங்கள் யார்கையில் இருக்கின்றன, என்பவற்றைச் சற்று சிந்தித்துப்பாருங்கள். 100 க்கு 90 பேர் கொண்ட கஷ்டப்படும், கீழ் நிலைமையிலுள்ள மக்களுக்கு 100 க்கு 10 பேர் கொண்ட சுகமனுபவித்துக்கொண்டிருக்கும் மேல் நிலையில் உள்ள மக்கள் இருக்கிறார்கள். இந்தமுறையை எப்படி ஜனநாயகம் என்று சொல்லமுடியும்? இந்த ஸதாபனங்களை எப்படி ஜனப்பிரதிநிதித்துவம் பொருந்தியது என்று சொல்லமுடியும். பெயரளவில் பொதுஜனங்களுக்கு ஒட்டுக்கொடுக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லலாமே ஒழிய பொதுஜனப்பிரதிநிதுத்துவத்திற்கு பயன்படக்கூடியதாய் இருக்கின்றதா பாருங்கள். எந்த ஸ்தாபனமும் எந்த நாட்டிலும் இபபடித்தான் இருந்துவருகின்றன. ஏழைகளுக்கு ஏற்றமாதிரி லட்சியம் மாற்றப்பட்டாலொழிய மற்றபடி எவ்விதத் திட்டத்திலும் உண்மையான பலன் ஏற்படாது. எவ்வளவோ கஷ்டப்பட்டு ஆட்சிமுறையை மாற்றியிருப்பதாக நினைத்துக்கொண்டாலும் இதுவரை நிர்வாகஆட்சி எதுவரையிலாவது மாறுபாடடைந்து இருப்பதாகக் கருதமுடியுமா என்றுபாருங்கள்.

கஷ்டப்படும் மனிதனுக்கு 'சுகப்படும் மனிதன் பிரதிநிதியாகவும்ஏழைக்கு செல்வவான் பிரதிநிதியாகவும் தொழிலாளிக்கு முதலாளி பிரதிநிதியாகவும் கீழ்ஜாதிக்கு மேல்ஜாதி பிரதிநிதியாகவும் அடிமைப்பட்ட பெண் சமூகத்துக்கு ஆதிக்கம் செலுத்தும் ஆண்சமூகம் பிரதிநிதியாகவும்தானே பெரிதும் பிரதிநிதித்துவம் பெற்றிருக்கிறது. இதை ஞாயமென்று சொல்லமுடியுமா? எலிகளுக்குப் பூனை பிரதிநிதிகளாய் வருவதாய் இருந்தால் பயன் உண்டாகுமா என்று யோசித்துப்பாருங்கள். அன்றியும் இன்றைய ஸ்தல ஸ்தாபனங்கள் ஏழைகளுக்கு உதவும்படியாய் ஏழைகள் கிரமமான பிரதிநிதித்துவம் பெரும்படியாய் அமைக்கப்படவேண்டும். ஏழைமக்களுக்குத் தங்கள் நிலைமையையும் அதன் காரணத்தையும் உணரும்படியாகவும் அதற்குப் பரிகாரம் தேட யோக்கியதை உண்டாகும்படியாகவும் கற்பிக்கப்படவேண்டும். அவர்கள் பெரும் பிரதிநிதித்துவத்தை சரியானபடி பிரயோகித்துக் கொள்ளவும் கற்பிக்கப்படவேண்டும்.

இப்போது செல்வவான்களுக்கும் படித்த கூட்டத்தாருக்கும் தங்கள் நிலைமையும் அதை அடையும் விர்த்தி செய்யும் மார்க்கமும், அதற்காக ஸ்தலஸ்தாபனங்களை எப்படி அடைவது அதில் தங்கள் நன்மை எப்படி மேலும்மேலும் பெருகபயன்படுத்திக்கொள்ளுவது என்பது நன்றாய் தெரியும். அதுபோல் மற்றவர்களைப் பார்க்க வேண்டாமா. தேசத்தின் முன்னேற்றம், விடுதலை, சுதந்திரம் என்பவைகள் பெரும்பான்மையான 100 க்கு 90 ஆக உள்ள மக்கள் சமூகத்தின் முன்னேற்றம் விடுதலை சுதந்திரம் ஆகியவைகளைப் பொருத்ததா 100 க்கு 10 பேராக உள்ளமக்களின் ஏற்கனவே உயர்நிலையில் உள்ள மக்களின் நன்மையைப் பொருத்ததா என்றுபாருங்கள். நாம் இப்படிச் சொல்லுவதற்கு ஆக வருத்தப்படாதீர்கள். உங்கள் மீது சிறிதும் தப்பிதம் சொல்லமுடியாது. மற்றவர்களைவிட ஈரோடு எவ்வளவோ ஏழைகளுக்கு பயன்படக்கூடிய நிலையில் இருக்கிறது. இதுமாத்திரமல்ல மற்றநாடுகளைவிட இந்தியா இந்தக் காரியத்தில் அதிக மோசம் என்று சொல்லிவிடமுடியாது. வெகுகாலமாக நாகரீகத்தில் சிறந்துவிளங்கும் ஜெர்மனி தேசம் சமதர்ம ஜனநாயகமாய் இருந்தும், சக்கரவர்த்தியையும்அரசனையும் பட்டத்தில் இருந்து இறக்கி, தேசத்தைவிட்டு விரட்டி அடித்து ஜனங்களே அரசாட்சி புரிகிறார்கள் என்று சொல்லப்பட்டாலும் அங்கு, இங்கு உள்ள ஏழைகளைவிட அதிக ஏழைகள் கஷ்டப்படுகிறார்கள், மக்களுக்கு வேலையே இல்லாமல் திண்டாடுகிறார்கள். ஒவ்வொரு பெரிய தொழிற்சாலைகளும் வியாபாரஸ்தலங்களும் 3-ல்

மாமாங்கம் என்றால் என்ன? மடமக்களே! மாமாங்கத்திற்குப் போகிறீர்களா? வெட்கமில்லையா?

குருட்டு நம்பிக்கைக்கு ஆதாரம் கும்பகோண மகாமகம்.

2-பாகம் மூடிக்கிடக்கின்றன. விபசாரித்தனத்தினுல் பணம் சம்பாதித்து வயிறு வளர்க்கவேண்டிய பெண்களின் எண்ணிக்கை லேசானதல்ல. நல்ல கெளரவமான கடைத்தெருக்களில் பெருத்த கூட்டங்களுக்கிடையில் பகல் காலத்தில் கையைப்பிடித்து ரூமுக்கு வரும்படி அழைக்கிறுர்கள்.

நல்ல ஆபீசுகள், கம்பெனிகள் இருக்கும் தெருக்களின்மேல்மாடிகள் எல்லாம் பெரிதும் விபசாரப்பிழைப்பு பெண்கள் காணப்படுகிறுர்கள். பட்டணங்களை விட்டு தோட்டம் காடுகளில் வசிக்க ஆசைப்படுகிறுர்கள். ஜர்மனி ஒரு சமயம் சண்டையினுல் தோல்வியுற்றதால் இந்தக் கஷ்டம் அனுபவிக்கின்றதோ எனனமோ என்று நீங்கள் கருதக்கூடும்.

";குபேர பட்டண"மாகிய அமரிக்காவை எடுத்துக்கொள்ளுங்கள், அமரிக்க பெண்களை லண்டனில் சந்தித்த காலத்தில் அவர்களும் தங்கள் ஊர் எழைகளின் நிலைமையைப் பற்றிச் சொல்லும்போது அங்கு அநேகர் தொழில் இல்லாமல், வீடு இல்லாமல், பட்டினியாய் அவஸ்தைப்படுவதுடன், ரோட்டுகளில் ரிப்பேருக்காக போடப்பட்டுள்ள முனிசிபல் குழாய்களுக்குள் படுத்துக்கொள்ளுகிறுர்கள் என்று சொன்னுர்கள். இப்படியே இன்னும் சில தேசங்களில் நேரில் பார்த்தோம். இங்கிலாந்து கிராமங்களில் சென்று அங்குள்ள தொழிலாளர்கள் வீடுகளில் இருந்து அவர்கள் வாழ்க்கையில் கலந்து பார்த்ததில் வெரும் உருளைக்கிழங்கையும், முள்ளங்கிக்கீரைகளையும் வேக வைத்து, உப்புதூவி சாப்பிடுகிறுர்கள். எங்களுக்கும் அதைத்தான் கொடுத்தார்கள். அந்தப்படி கஷ்டப்படும் தோழிலாளி ஏழைகள் நம்மிடம் வெகு அன்பாயும் நம் நாட்டு தொழிலாளிகளிடம் வெகு அனுதாபமாயும் நடந்துகொள்ளுகிறுர்கள். இவற்றிற்கெல்லாம் தேசமோ தேசாபிமானமோ, காரணம் அல்ல. மனுஷாபிமானமும், கஷ்டப்படும் மக்களின் வகுப்பு அபிமானமுமேயாகும்.

ஆகவே நமதுதேச ஆட்சியினுலும் ஸ்தலஸ்தாபன ஆட்சியினுலும், மனுஷ அபிமானத்தாலும், கஷ்டப்படும் மக்களை அதிலிருந்து விடுதலை செய்ய அந்த வகுப்பு அபிமானத்தாலுமே தான் ஆட்சி நடத்தப்படும் மாதிரியில் இருக்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இவைதங்களுக்கு மாறுபாடாகக்காணலாம். ஆனுல் நான் சொல்லுவதுதான் சரி. நீங்கள் அபிப்பிராயப்படுவது தப்பு என்று நான் சொல்லவரவில்லை. நான் சொல்லுவதை யோசித்து தாங்கள் காண்பதையும், தாங்கள் அனுபவத்தில் அனுபவிப்பதையும், மற்றும் உலக நிலையை கேள்விப்படுவதையும் சேர்த்துகலந்து ஆலோசித்து தங்களுக்கு தோன்றுகின்ற முடிவுக்குவரவேண்டுமென்றும், வந்த முடிவுப்படி நடக்கவேண்டும் என்றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன் என்பதாக பேசினுர். தோழர். ஈ. வி. நஞ்சப்ப செட்டியார் நன்றி செலுத்தினுர். கல்வியைப்பற்றி உபாத்தியாயர்கள் இடையும், மாணவர்கள் இடையும் பேசியவை பின்னுல் வெளியாகலாம்.

அந்தோபாவம்.

பாதிரியார் பதட்டம்

கோயமுத்தூர் ஜில்லாவெங்கும் உள்ள கத்தோலிக்கக் கிறிஸ்தவ மக்களுக்கு, அவர்களின் தலைமைப்பிஷப்பால் ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறதாம். அதில் "சுயமரியாதை இயக்கத்தில் எவ்வித சம்பந்தமும்வைத்து கொள்ளக்கூடாதென்றும், "குடி அரசு" பத்திரிகையையோ அல்லது சுயமரியாதைப் பிரசுரங்களையோ ஒருவரும்படிக்கலாகாதென்றும், மீறிப் படிப்பவர்களோ, சம்மந்தம் வைத்துக்கொள்பவர்களோ, ஜாதிப் பிரஷ்டம்செய்யப்படுவார்கள்" என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

அந்தோ பாவம் இது இருபதாம் நூற்றுண்டு என்பதையும், தற்கால நவீன விஞ்ஞான ஆராய்ச்சியும், முற்போக்கும் "சிருஷ்டிகர்த்தா" உடன் தொடுக்கப்பட்ட யுத்தமென்பதையும், மதமும் வேண்டாம், கடவுளும் வேண்டாம், உணவு கிடைத்தால் போதும் என்று தொழிலாளி மக்களது பேரிரைச்சலும் காதைப் பிளக்கின்றனவே இதை இவர் அறியார் போலும். அதுமாத்திரமா? கடவுளும் மதமும் பம்பாய் க்வீன் வீதி [Queen's Street] யிலும் லண்டன் பிளீட் வீதியிலும் [Fleet Street] 61 பாரிங்டன் வீதியிலும் (61-Farrington Street) படுகின்றபாட்டை அறியார்போலும்: பாவம் — இரங்கவேண்டியதுதான். ஆனுல் ஒருசிலவயோதிகர்களும், பழுத்த வைதீகங்களும் இத்தகைய மிரட்டலுக்கும் பூசசாண்டிக்கும், பயப்படலாம், செவிமடுக்கலாம். ஆனுல் வீரமும், தாய்மையும், உண்மையும் கொண்டவாலிபர்கள் எங்களுக்கு மதமும் வேண்டாம், கடவுளும் வேண்டாம், அறிவுவளர்ச்சிதான் வேண்டுமென்று கர்ஜிக்கிறுர்களே, மூரசொலிக்கிறுர்களே இதற்கென்ன செய்யப்போகிறுர்.

மாமாங்கத்தால் என்ன பலன்.

ரயில்காரனுக்கு-கொள்ளை லாபம்
"விபசாரி"களுக்கு-விருந்து
காமுகர்களுக்கு-கொண்டாட்டம்
பணக்காரக்கூட்டம்-தாண்டவமாடும்
பார்ப்பான் சங்கதி-பகரவும் வேண்டுமோ
ஏழைகள் பாடு-திண்டாட்டம்

கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்.

1—12—32 தேதி வியாழக்கிழமை மாலை 7 மணிக்கு ஷை சங்கத்தின் விசேஷக் கூட்டமொன்று புதிதாகச் சுயமரியாதை முறையில் சிக்கனமாக திருச்சியில் விதவைத்திருமணம் கடந்த 29 தேதி ரிஜிஸ்டர் செய்து கொண்ட தோழர்கள் கே. ஜானேஜிராவ், டி. ஆர். மஞ்சுளாபாய் அம்மையார் ஆகியவர்களைப் பாராட்டு முகத்தான் தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. தலைவர் அவர்கள் மணமக்கள் சாதி, சமூகப் பழக்க, வழக்கக் கட்டுப்பாட்டைப் பொருட்படுத்தாது தைரியமாகக் காதல் மறுமணம் செய்து கொண்டதைப் பாராட்டிச் சிலவார்த்தைகள் கூறி மணமக்களுக்கு மாலை சூட்டியுபசரித்தார். பின்னர் தோழர் என். கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடினுர். மணமக்களைப் பாராட்டி தோழர்களான பி. இரங்கசாமி, ஈ. வி. சோமசுந்தரம், ஆர். நஞ்சையா, சி. கே. சந்தானம், ஆர். கிஷன், எச். எஸ். முனுசாமி ஆகியோர்கள் பேசினுர்கள். மணமக்கள் பதில் கூறியபின் தலைவர் முடிவுரையாக இத்தகைய சீர் திருத்த முறையில் விதவை மணம், கலப்பு மணங்கள் நடைபெற வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி வாலிபர்கள் சமூகக்கட்டுப் பாடுகளுக்கோ, பழக்க வழக்கங்களுக்கோ சிறிதும் அஞ்சாது தைரியமாக இத்தகைய மணங்களை செய்ய வேண்டுமென்னும் பொருள்பட மிக இனிமையாகப் பேசினுர். பின்னர் காரியதரிசியால் வந்தனங்கூறப்பட்டு இரவு 9 மணிக்கு கூட்டம் இனிதுமுடிந்ததுஎனக் காரியதரிசி எழுதுகிறுர்.

ஷை சங்கத்தின் வாராந்திரக் கூட்டமொன்று 4-12-32 தேதி மாலை 7-30 மணிக்கு தோழர் ஏ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. என். கே. கஸ்தூரி அவர்கள் சுயமரியாதைக் கீதங்கள் பாடினுர். பின்னர் "மாயா வித்தைகள்" (Spuritnalism) என்ற பொருள் பற்றி தோழர் கே. பிரமாச்சாரி எம். ஏ. எல். டி. அவர்கள் பேசினுர். பேய், பிசாசு, பில்லி, சூன்னியம், மைபோட்டுப் பார்த்தல், டெலிபதி, டெலிபிஷன், தண்ணீர் நிலைகண்டு பிடித்தல், சாந்தி முதலியவைகளின் புரட்டைப் பற்றி நீண்டதோர் சொற்பொழிவாற்றினர் அதைத்தழுவி தோழர்களான ஜே. எஸ். இராமானுஜம், ஆர். கிஸன், ஈ. வி. சோமசுந்தரம் ஆகியோர்கள் பேசினுர்கள். பின்னர் தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனேபசாரத்துடன் கூட்டம் முடிந்தது என சங்கக் காரியதரிசி ஆர். கிஸன் அவர்கள் அறிவிக்கிரார்.

அகம்படியர் அபிவிருத்திச் சங்கம்.

கோயமுத்தூர் டவுன் இராமநாதபுரத்தில் அகம்படியவாலிபர் அபிவிருத்திசங்கம் என்ற பெயருடன் ஓர் சங்கத்தை 8-10-1932ந் தேதியில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அச் சங்கத்திற்கு திரு. டாக்டர் எஸ். வி. அப்பாஜி எல். எம். பி. அவர்களைத்தலைவராகவும், திரு. எஸ். கே. சிவகாமி அவர்களை உபத்தலைவராகவும், திரு. ஆர். ஏ. சுப்பிரமணியத் தேவர் வி. எம். அவர்களைக் காரியதரிசியாகவும், திரு. ரு. ப. இராமகிருஷ்ண பிள்ளை அவர்களை உபக்காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறுர்கள் என ஒரு நிருபர் எழுதுகிறுர்.

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

1932-வரு S. C. No. 657.

வெ. வீர பாங்கு வள்ளியப்ப செட்டியார்—வாதி.

பல்லடம் தாலூகா கருமத்தம்பட்டி கிராமம் மஜரா எளிச்சிபாளையத்திலிருக்கும் மசக்கவுண்டன் தோட்டம் பெரிச்சியகவுண்டன் மகன் சின்னிய கவுண்டன்—1ம் பிரதிவாதி.

ஷை 1ம் பிரதிவாதிக்கு இதனுல் தெரிவிப்பது என்னவென்றுல், உம்ம வகையரா பேரில் ஷைவாதி பிராம்சரி நோட்டுப்படி ரூபாய் 258-0-0 வரவேணுமாய் தாவா செய்து 16—12—32 தேதி வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஷை தேதியில் நீர் காலை 10 மணிக்கு நேரிலாவது வக்கீல் மூலியமாவது ஆஜராகி ஆக்ஷேபனையைத் தெரிவித்துக்கொள்ளவேண்டியது. இல்லாதவரை ஒருதலைபக்ஷமாக விசாரித்துத் தீர்ப்பு செய்யப்படும் என்ற சங்கதி அறியவும்.

M. K. Govindarajulu Chettiar, Counsel for Pltf.
திருப்பூர், 5-12-32.

திருச்சியில் மறுமணம்.

—0—

தோழர், விசாலாக்ஷி சுப்பையா தலைமை வகித்தார்.

திருச்சி தெப்பக்குளம் முனிசிபல் சத்திரத்தில் கோயமுத்தூர் தோழர். கே. ஜானோஜிராவ் அவர்களுக்கும், தஞ்சாவூர் தோழர். டி. ஆர். மஞ்சுளா பாய் அவர்களுக்கும் சென்ற நவம்பர் மீ 29-உ செவ்வாயன்று பிற்பகல் 5 மணிக்கு தமிழ் நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கச்சார்பில் மறுமணம் சிறப்பாக நடைபெற்றது. நகரில் பலருக்கு ஏற்கனவே அழைப்புகள் அனுப்பப் பட்டிருந்தபடி மாலை நான்கு மணிக்கே ஏராளமான ஆடவர்களும், பெண்களும் கூடி விட்டனர். முனிசிபல் சத்திரத்தின் முன்பு கொடிகளால் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. தலைவர் தோழர். விசாலாக்ஷி சுப்பையா அவர்கள் தோழர்களுடன் காரைக்குடியிலிருந்து காரில் வந்து சேர்ந்தனர். மறுமண வைபவத்திற்காக தோழர்களான டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்., டி. பி. வேதாசலம் பி. ஏ. பி. எல்., கே. எம். பாலசுப்ரமணியம் பி. ஏ. பி. எல்., ஜெ. எஸ் ராமானுஜம் பி. ஏ. பி. எல்., நீலாவதி ராமசுப்ரமணியம், மு. அ. அருணாசலம், ச. ம. சி. பரமசிவம், சி. ஏ. ராஜகோபால் பாரதி, எஸ். ஏ. சே. கலியபெருமாள், எஸ். தங்கவேலு, டி. சி. சிங்காரம், டாக்டர் வி. சாமிநாத சாஸ்திரி, டாக்டர் ஒ. ஆர். பானு, ஏ. விஸ்வநாதய்யங்கார் பி. ஏ. பி. எல்., பாடிசன்ஸ்கூல் ஹெட்மாஸ்டர் என். ராமசாமிஐயர், எம். ஆர். திருமலைசாமி "நகரதூதன்" ஆசிரியர், கே. என். வாசுதேவன், பி. அபிமன்னன், டி இராவணதாஸ், ஏ. அழகியமணவாள நாயுடு, கே. அற்புதசாமி, ஜி. சித்தோஜீ ராவ், டி. எஸ். திருஞானசம்பந்தம், என். எம். எஸ். செல்வக்கணபதி, ஒய். சட்வாஜி ராவ், திரவியம், ஒய். விம்பாஜி ராவ், ஜி. சன்னாசி, உறையூர் டி. எம். சுந்தரம் பிள்ளை, ராஜகோபால் நாயுடு, வேணுசாமி, ராமலிங்கம், வேணு கோபால்சாமி, நகரசபை உறுப்பினர் ஆர் மருதை, ஸ்ரீரெங்கம், டி. துரைசாமி, எஸ். ராஜகோபால், எஸ். எம். லிங்கம், சேஷாசலம், நகர் ஆரோக்கியசாமி, லால்குடி ஆ. பூமிநாதன், மேறகற்கை எம். வி. துரைசாமி உடையார், எம். கருப்பணன் உடையார், லால்குடி டி. எம். முத்து, காரைக்குடி அருணாசலம், மீனாட்சி சுந்தரம், சி. த. இராமநாதன், தண்ணீர்மலை, பீமநகர் டி. எஸ். சஞ்சீவி, பாலகிருஷ்ணன், ஷண்முகசுந்திரத்தம்மாள், பொன்னம்மாள், அகிலாண்டத்தம்மாள், கண்ணகி அம்மாள், பாப்ப அம்மாள், சிவக்கொழுந்தம்மாள், இன்னும் பலருமாக சுமார் 500 பேர்களுக்கு மேல் கூடியிருந்தனர். தம்பதிகளுக்காக ஏற்படுத்தியிருந்த ஆசனத்தில் தம்பதிகளிருவரும் அமர்ந்ததும் கரகோஷம் செய்யப்பட்டது. இராவணதாஸ் சுயமரியாதை பாட்டுப்பாடினர். பின்பு ராமசுப்பிரமணியம் அவர்கள் எழுந்து தமிழ் நாட்டுப் புரோகித மறுப்புச் சங்கத்தின் சார்பாக காரைக்குடி தோழர். விசாலாக்ஷி சுப்பையா அம்மையாரை தலைமை வைத்து நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்ள ஷை சங்கக் காரியதரிசி ச. ம. சி. பரமசிவம் அவர்கள் ஆதரித்தார். தலைவர் முகவுரை பகர்ந்ததும் மணமக்களிருவரும் உறுதிமொழி கூறி மாலை மாற்றிக்கொண்டனர் மறுமணத்தைப் பாராட்டி குடி அரசு ஆசிரியர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும், கல்லிடைக்குறிச்சி தங்கவேலு அவர்களும், கோயமுத்தூர் சுயமரியாதை வாலிபர் சங்கம், சென்னை எஸ். குருசாமி பி. ஏ., எஸ். குஞ்சிதம் பி. ஏ. எல். டி., ஏ. பொன்னம்பலம், எஸ். வி. லிங்கம், ஆகியோரிடமிருந்து கிடைக்கப்பெற்ற வாழ்த்துத் தந்திகள் கடிதங்கள் வாசிக்கப் பெற்றன. பின்னர் தோழர்களான

டி. பி. வேதாசலம் பி. ஏ. பி. எல்.

அவர்கள் இம்மணத்தை ரிஜிஸ்டர் செய்யப் பட்டிருப்பது இந்நகருக்கே முதலாவதாகுமென்றும், இது போற்றத் தக்கது என்றும் பேசினர். விதவா விவாக சங்கத்தலைவர்

ராஜகோபால் பாரதி.

அவர்கள் இம்மாதிரியான மணம் நடைபெறுவதற்கு தாம் சந்தோஷிப்பதாக கூறி இரண்டு புத்தகங்களை மணமக்களுக்கு அளித்தார்.

டி. வி. சோமசுந்தரம் பி. ஏ. பி. எல்., அவர்கள்.

முற்காலத்தில் ஏற்பட்ட பழக்க வழக்கங்களினால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைக்கூறி திருத்தமடைதல் அவசியமென்றும் கூறினர்.

டாக்டர் வி. சாமிநாத சாஸ்த்திரி அவர்கள்.

தாம் விதவாவிவாகத்தை சிறப்புடன் வரவேற்பதாகவும், தமக்கு எது உண்மை யென்று தோன்றியதோ அதை சிறிதும் தயங்காது செய்வேன் என்றும், பல காங்கிரஸ் மகா சபைகளில் சீர்திருத்த மகா நாடு ஒன்று கூடுவது வழக்கம் அதில் ஏராளமான வாக்கு வாதங்கள் நடைபெறும். ஆனால் அந்தப்பந்தலை விட்டு வெளியே வந்தால் ஒரு கடுகளவு கூட சீர்திருத்தப்படி நடப்பதில்லை என்றும், விதவைகள் என்று நசுக்கப்பட்டதற்கு காரணம் ஆண்கள் கையில் சட்டம் வகிக்க வசதியிருந்ததால் அவர்கள் சௌகரியத்திற்கு என்னென்னவேண்டுமோ அவ்வளவையும் எழுதிவைத்துக்கொண்டார்கள். பொதுவாக சாஸ்த்திரமென்பதே சாஸ்த்திரம் செய்பவர்களின் சொந்த வசதிக்காகத்தான் என்று கூறல்வேண்டும் என்றும் இந்த ஊர் பிராமணாள் மீன் சாப்பிட்டால் மோசம் போய்விடும், மங்களூர் பிராமணர் மீன் சாப்பிட்டால் சாஸ்த்திரம் இடம் கொடுக்கிறதுபோலும், என்றும், தம்பதிகளில் பெண்ணுக்குத்தான் பிள்ளைப்பேறு முதலிய கஷ்டங்கள் அதிகம் இருக்கிறது. அநந்த பெண்சமூகத்திற்கு உதவி புரியவேண்டுமென்றும், தாம் இம்மாதிரி சீர் திருத்த விஷயத்தில் கலந்துகொள்வதில் மிகுந்த பிரியம் உண்டென்றும் மணமக்கள் நன்கு வாழவேண்டுமென்றும் கூறினர்.

ஹெட்மாஸ்டர் ராமசாமி அய்யர்.

பேசுகையில் சாஸ்த்திரமெல்லாம் சௌகரியத்திற்காக அவரவர் இஷ்டப்படி எழுதப்பட்டதாகும். இப்பொழுது நமக்கு என்ன இஷ்டமோ அதேமாதிரி தான் நாம் சாஸ்திரம் ஏற்படுத்தவேண்டும் நிதி கொடுப்பது ஒரு மூட்த்தனமாகும் அம்மாதிரி வழக்கங்கள் இனி காலக்கிரமத்தில் மாறிவிடுமென்று தாம் நம்புவதாகவும் கூறினர்.

பின்னர் கே. எம். பாலசுப்பிரமணியம்பி. ஏ.பி.எல்., ஜெ. எஸ் ராமானுஜம் பி. ஏ, பி. எல்., நா. வேணுகோபால்சாமி, அற்புதசாமி, எஸ். நீலாவதி அம்மையார் ஆகியோர் விதவா விவாகத்தைப் பற்றி நீண்ட பிரசங்கங்கள் செய்தார்கள். வந்திருந்தோர்களுக்கு சந்தன தாம்பூலம் புஷ்பம் வழங்கப்பட்டது. ஒரு போட்டோ எடுக்கப்பெற்றது இரவு 8-மணிக்கு ராமசுப்பிரமணியம் அவர்களால் வந்தனம் கூறப்பெற்று இனிது கூட்டம் முடிந்தது தம்பதிகள் இரவு 11 30 மணி வண்டிக்கு ஈரோடு பயணமானர்கள்.

திருச்செங்கோடு.

வாலிப சகவாச சங்கம்;— ஷை சங்கத்தின் வாராந்திரக்கூட்டமொன்று 27-11-32ந் தேதி ஞாயிறன்று மாலை தோழர் டி. ஜி. அர்த்தநாரி அவர்களின் தலைமையின்கீழ் கூடியது "கடவுளும் மக்களும்" என்னும் பொருள் பற்றி தோழர்கள் வி. ருத்ரம், எஸ். கே. வரதராஜலு, டி. ஏ. கைலாசம், எஸ். சி. ஆர். சாமி, டி. ஏ. சங்கரலிங்கம், டி. எஸ். நடேசு முதலியவர்கள் அருமையாக விரிவுரையாற்றினர் கூட்டம் இரவு 8 மணிக்கு இனிது கலைந்தது எனஒரு நிருபர் எழுதுகிறா.

கிராம முன்னேற்ற வாலிபர் சங்கம்

டிசம்பர்மாதம் 4தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 2மணிக்கு தி- தா. அரியமங்கலம் கிராமம் தாலுக்கா போர்டு பாடசாலைக்கு முன்னதாக கிராம வாசிகளால் 'கிராம முன்னேற்ற வாலிபர் சங்கம்" ஸ்தாபிதம் செய்வதற்காக ஷைகிராமம் திரு. ம. அ. சின்னை முத்து ராஜா அவர்கள் தலைமையின் கீழ் ஓர் பொதுக் கூட்டம்கூடிற்று. அப்பொழுது ஷைசங்கத்தின் நோக்கங்களையும், அவசியத்தைப் பற்றியும் சில பேசின பிறகு ஷைசங்கம் ஸ்தாபிதம் செய்யப் பட்டது என ஒரு நிருபர் எழுதுகிறர்.

Ready for Sale! Ready for Sale!!

The Crux of the Indian Problem
By Dr. Paranjpye M. A., D. Sc.

————)o(————

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are Sincerely interested in social advance and rejuvanation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degradable Social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! matured sentiments!!

English Print well gotup and neatly bound about 100 Pages

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.

ஷண்முகவேல் ஞாபகார்த்த வாசகசாலை தூத்துக்குடி.

ஷை சங்கத்தின் ஆதரவில் 27-11-32 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 6.30 மணிக்கு நிர்வாக அங்கத்தினர்களின் கூட்டம் திருவாளர் சு. உ. வெற்றிவேல் நாடார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்போழ்து சென்னையில் கூடப்போகும் 14-வது நாடார் மகாநாடு விஷயமாய் கீழ்கண்ட தீர்மானங்களை ஏகமனதாய் ஒப்புக்கொண்டு பத்திரிக்கைகளுக்கும் உபசரனைக் கமிட்டியாருக்கும் அனுப்புவதென முடிவு செய்யப்பெற்றது.

தீர்மானங்கள்.

1. தற்காலம் நமது இந்தியா இருந்துவரும் நிலைமையில் சென்னையில் கூடப்போகும் நமது 14வது மகாநாடு எந்த இயக்கத்தையும், கட்சிகளையும் ஒரு சார்பாய்க்கொள்ளாமல் பொதுவாய்ச் சீர்திருத்தம், முன்னேற்றம் இவைகளுக்கானவைகளைச் செய்யும் நோக்குடன் நடுநிலைமை வகிக்கும்படி மகாநாட்டை இவ் வாசகசாலை கேட்டுக்கொள்ளுகிறது.

2. ஜாதிமத வேற்றுமைகளை அகற்றப் பிரயாசை எடுத்துவரும் இந் நாட்களில் நமக்குள் தட்சண நாடார், வடதிசைநாடார், இந்துநாடார், கிறிஸ்துவநாடார், வெளிநாட்டு நாடார், உள்நாட்டுநாடார், என்னும் பல பிரிவினையாக மகாநாட்டுப்பந்தலில் தனித் தனிக் கூட்டம் கூட்டவாவது, ஷை பிரிவினை உணர்ச்சிகளை உண்டுபண்ணக்கூடிய எத்தகைய காரியங்கள் செய்யவாவது பேசவாவது அறவேகூடாதென்று கேட்டுக்கொள்வதுடன் மேற்கண்ட பாகுபாடுகளை உண்டுபண்ணக்கூடிய விதமாய் தனித்தனிக் கூட்டம் கூட்ட உபசரணைக் கமிட்டியாரே பத்திரிகை வாயிலாகப் பிரசாரம் செய்து வருவதை இக் கூட்டம் அழுத்தமாய்க் கண்டிக்கிறது

மகாநாட்டில் ஆலோசனைக்குக் கீழ்க்கண்ட விஷயங்களைக்கொண்டு வரக்கேட்டுக்கொள்ளுகிறது.

ஏ. அகில இந்தியாவுக்கு வேண்டப்படுவதாகிய பாலிய விவாகத் தடை.

பி. வயதில்ஒவ்வாத பேதமுள்ள விவாகத்தடை.

சி. விதவா விவாகத்தை ஆதரித்தல்.

டி. தெய்வத்தின்பேரால் செய்யும் அர்த்தமற்ற சடங்குகள், வீண் பொருள்விரயம் முதலியவைகளைத் தடுத்தல்.

இ. சுபாசுபகாரியங்களில் சிக்கனத்தையும், பகுத்தறிவையும் கையாளுதல்.

4. ஆண், பெண் கட்டாயக் கல்வி அபிவிருத்திக்கான கிராமப் பிரசாரங்கள் செய்யவும் அதற்குப் பொருளாதாரத்திற்காக மூன்றுவது லாட்டரி சீட்டு ஆரம்பித்து முற்றுப்பெற நடத்தவும் கேட்டுக்கொள்ளுகிறது.

5. நம்மவர்களால் நடத்தப்படும் கலாசாலைகளில் கைத்தொழிற்கல்வி வர்த்தகக் கல்வி, விவசாயக் கல்வி முதலிய ஜனசமூக முன்னேற்றத்துக்கானவைகளைப் போதித்துவர மகாநாட்டில் தீர்மானிக்கக் கேட்டுக்கொள்ளுகிறது.

6. வரப்போகும் புதிய சீர்திருத்தத்தில் சட்டசபை முதலிய ஸ்தல ஸ்தாபனங்களில் நாடார்களுக்கும் போதிய ஸ்தாபனங்கள் கிடைக்க மஹாஜனசங்கம்முயற்சிக்கும்படி இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

7. ஆண்களைப்போல் பெண்களுக்கும். சமத்துவம், சொத்தில் சம உரிமையும் வழங்கத் தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

8. நாடார்களுக்குச் சொந்தமான ஆலயங்கள், பள்ளிக்கூடங்கள் முதலிய பொது ஸ்தாபனங்களில் சகல ஜனசமூகத்தாருக்கும் சமத்துவம் அளிக்கும்படி தீர்மானிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

9. கரும்புக் கட்டியைச் சுத்திசெய்து சீனியாக்கக்கூடிய ஒர்யந்திர சீனி ஆலைகூட்டுறவுச்சங்க ஆதரவில் ஏற்படுத்தி ஷை தொழிலை விருத்திசெய்துவர ஏற்பாடுசெய்ய நாடார் மஹாஜன சங்கம் முயற்சிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

10 "நாடார் மஹாஜனம்" எனும் பெயரோடு வெளிவரும் பத்திரிக்கை நமது பதினுலாவது மஹாநாடு கூட்டத்திற்காக மட்டும் பிரசுரிக்கப்படுவதாயிருப்பின் மகிழ்வெய்துவதுடன் மஹாநாடு முடிவடைந்தபின் ஷை பத்திரிகை "நாடார் மஹாஜனம்" எனும் பெயரோடு வெளிவரின் ஆசிரியர் பொதுநோக்குடையவராயும், தனிப்பட்ட ஜாதிபூஷணையும் காலத்திற்கொழ்வாத பண்டைப் பழக்க வழக்கங்களையும் அனுசரிக்காதவராயும் இருத்தல்வேண்டுமென ஏகமனதாய் வற்புறுத்துகின்றோம்.

மதுரைஜில்லா சுயமரியாதை மகாநாடு.

மதுரையில் இம்மாதம் 17, 18ந் தேதிகளில் நடைபெறவேண்டிய மதுரைஜில்லா சுயமரியாதை மகாநாட்டைத் தலைவர்கள்சௌகரியத்தை உத்தேசித்து 1933-ஞு ஜனவரி-மீ இரண்டாவது வாரத்தில் நடத்துவதென்று ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. என விளம்பர அதிகாரி தோழர் ஏ. எஸ். ஆனந்தம் எழுதுகிறார்.

"முசோலினி"

காரமடை தோழர் ஏ. துரைசாமி பி. ஏ. அவர்கள் தமது குழந்தைக்கு இட்டாலிதேசத்து சர்வாதிகாரியான முசோலினியின் பெயரை வைத்திருக்கிறதாக ஒரு நிருபர் எழுதிகிறார்

புதுககோட்டை சமஸ்தானம் முதலாவது தாழ்த்தப்பட்டார் மகாநாடு.

இம்மகாநாடு குளத்தூர் தாலூகா புலியூர் சேகரம் சவரியார்புரத்தின்கண் 13-12-32ந் தேதி சனிக்கிழமை சென்னை சட்டசபை உறுப்பினரும், அட்வகேட்டுமாகிய தோழர் எஸ். எம். ஞானப்பிரகாசம் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் நடைபெறும்.

மகாநாட்டுத் திறப்பாளராகத் தோழர் மரகதவல்லி, முருகப்பா அவர்களையும், கொடியேற்றுபவராகத் தோழர் நீலாவதி, ராமசுப்பிரமணியம் அவர்களையும், தோழர் ஈ; வெ. ராமசாமியார் படத் திறப்பு விழாவைத் திறந்து வைக்கத் தோழர் எம். பி. மருதை அவர்களையும், தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறது. சொற்பொழிவாளர்களாகச் சுயமரியாதை இயக்கத் தோழர்கள் பலர் வருவார்கள் எனக் காரியதரிசி எழுதுகிறார்.

திருமங்கலம் தோழர் மணிமாறன்சொற்பொழிவு

இவ்வூர் "மாணவர் சங்கத்தின்" ஆதரவில் தோழர் எஸ். வி. ராமசாமி எம். ஏ. எல். டி, அவர்களின் தலைமையில் ஒரு கூட்டம் 2-12-32 மாலை 4-30 மணிக்குக் கூடியது. தலைவர் அவர்கள் "தொத்துநோய்" என்பதுபற்றிப் பேசும்படி தோழர் மணிமாறன் அவர்களைக் கேட்டுக்கொண்டார்.

தோழர் மணிமாறன் அவர்கள் எழுந்து தொத்துநோய்களான வைசூரி, காலரா, பிளேக் முதலியவைகளைக்காட்டிலும், மக்களுடைய அறிவையும், பணத்தையும், காலத்தையும், கெடுக்கும் ஜாதி, சடங்கு, புராணம், மதம், கடவுள் முதலிய தொத்துநோய்களைத்தான் அவசரமாக ஒழித்தாகவேண்டுமென்றும் அது மக்களுக்கிழைத்துவரும் கெடுதிகளையும் விளக்கிப் பேசினார். தலைவர் அவர்கள் முடிவுரைக்குப் பின் தோழர் கிருஷ்ணன் அவர்கள் வந்தனோபசாரம் கூற கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

பாண்டமங்கலம் நாடார் இலவச வாசகசாலை

மேல் கண்ட வாசக சாலையின் கூட்ட மொன்று 23-11-32 இரவு 3-30 மணிக்கு தோழர் ஆர். எம். குப்புசாமி அவர்கள் தலைமையில் கூடியது. அவ்வமயம் 14வது நாடார் கான்பரன்ஸ் என்னும் விஷயமாக சிறிது நேரம் பேசியதின் பின் தீர்மானங்கள் ஏகமனதாய் தீர்மானிக்கப்பட்டன. பிறகு நீண்ட உபந்யாசத்துடன் கூட்டம் இனிதுகலைந்தது. எனஒரு நிருபர் எழுதுகிறார்

மணமகன் தேவை.

நல்ல அழகும் சிறிது செல்வமும் கல்வியும் உடைய வாலிபமடைந்த பெண்ணுக்கு ஒரு மணமகன் தேவை கல்வியில் பட்டம் பெற்றவரும் உத்தியோகத்தில் இருப்பவரும் அல்லது தக்க தொழில் முறையில் இருப்பவருமான சுமார் 20, 25 வயதுடைய வாலிபராய் இருக்கவேண்டும்.

K. S.
C/o குடி அரசு.

ஈ. வெ. ராமசாமியின் இலங்கை சொற்பொழிவு

24, பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100- புத்தகம்ரூ 1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ-அனுப்பினுல் 100-புத்தகம் தபால் சிலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
"குடி அரசு" ஈரோடு.

அதிர்ஷ்டம் மாத்திரமல்ல
அறிவுதானம் செய்த பலனுமுண்டு.

பச்சையப்பன் கலாசாலை

லாட்டரி.

ரூ. 1,00,000- பிரைஸ்கள் 3059. முதல்பிரைஸ் ரூ. 20,000
ஒரு டிக்கட் விலை. ரூ. 1
முடியும் தேதி 30-6-33. எடுக்கப்படும் தேதி 31-7-33.
மற்ற விபரங்களுக்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

காரியதரிசி,
வி. திருவேங்கிடசாமி எம். ஏ.
பச்சையப்பன் ஹாஸ்டல், சேத்துப்பேட்டை, மதராஸ்.

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

பொறுத்தவரையிற் மதத்தை எதிர்த்து நிற்கும் அறிவுப்போர் எவனுடையவும் சொந்த விஷயம் என்று பாவிக்காமல் நம்முடைய கட்சியையும், தொழிலாளர்கள் விடுதலையையும் பொருத்ததாகவே பாவிக்கவேண்டும்

அப்படியானால். நம்முடைய வேலைத்திட்டத்தில் நம்மை நாஸ்திகர்கள் என்று ஏன் கூறிக்கொள்ளவில்லையென்ற கேள்வி பிறக்கலாம். கிறிஸ்துவர்களையும் கடவுளிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் ஆஸ்திகர்களையும் நம்முடைய கட்சியில் ஏன் சேர்த்துக் கொள்வதில்லையென்ற கேள்வியும் பிறக்கலாம். இந்தக்கேள்விகளுக்குக்கூறப்படும் பதிலில் இருந்துதான் ஜன நாயகத்தை (டிமாக்கரசிக் கொள்கையை) அபேட்சிக்கும் முதலாளிக்கூட்டத்திற்கும், தொழிலாளிக் கூட்டத்திற்கும் மத விஷயத்தில் ஏற்பட்டிருக்கும் முக்கியமான அபிப்பிராயபேதம் தெற்றென விளங்கும்.

வேலைத்திட்டம்.

நம்முடைய வேலைத்திட்டமானது விஞ்ஞானக்கொள்கையில் (சைன்ஸில்) பற்றுக்கொண்டது. அதாவது திடமான பிரகிருதிப் பொருள்களில் மாத்திரம் நம்பிக்கை கொண்டது. ஆகையினால் நம்முடைய வேலைத்திட்டத்தை விளக்கிக்கூறும் முறையில் சரித்திர பூர்வமாகவும், பொருளாதார மூலமாகவும் மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் வேலைகளை அஸ்திவாரங்களை விளக்கிக் காட்டவேண்டியது அவசியமாகின்றது. இதிலிருந்து நம்முடைய வேலைத்திட்டத்தில் நாஸ்திகப்பிரசாரமும் அடங்கியிருக்கிறது என்பது வெளியாகும். மேலும் இதுவரையில் பிரபுத்துவத்தையும், எதேச்சாதிகாரத்தையும் மேற்கொண்ட அரசாங்கத்தால் தடைப்பட்டது போலல்லாமல் இனி விஞ்ஞான (சைன்சின்) ஆராய்ச்சிகளைப்பற்றிய பிரசுரங்கள் வெளியிடுவது நமது கட்சியின் வேலைத்திட்டத்தில் ஒரு அம்சமாக இருக்கவேண்டும். ஒரு காலத்தில் ஜர்மனியில் சமதர்மக் கட்சியாருக்கு ஏஞ்சல்ஸ் என்னும் அறிஞர் சொல்லிக் கொடுத்ததுபோல் பதினெட்டாவது நூற்றாண்டில் ஏற்பட்ட நிர்ஈச்சுவர (நாஸ்த்திக) நூற்களை மறுபடியும் பிரசுரிக்க நேரும்.

தொழிலாளி முதலாளி போரும், மதமும்.

ஆனால் நாம் எந்த முகாந்திரத்தைக்கொண்டும் மதத்தைப்பற்றிய பிரச்சினையை தொழிலாளி-முதலாளிப் போரின் சம்மந்தத்தினின்று பிரித்துவிடக்கூடாது. மதத்தைப்பற்றிய ஆராய்ச்சியை தனிப்பட்ட அறிவிற்கு மாத்திரம் விட்டுவிடக்கூடாது. இம்மாதிரி பிரித்துவிடவேண்டுமென்பதே முதலாளி கூட்டத்தாரின் தந்திரமாகும். தொழிலாளிகளைத்தலையெடுக்கவொட்டாது அடக்கிக் கொடுமைப்படுத்திவரும் ஒரு சமூகவாழ்க்கையமைப்பிலிருந்து கொண்டு மதத்தினால் ஏற்படும் மடமைகளைச் சொல்லளவில் நீக்கிவிடலாமெனக் கருதுவது எண்ணத்தகாத காரியமாகும். மதத்தின் பெயரால் மக்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமைகளெல்லாம் பொருளாதாரத்துறையில் ஏற்பட்டிருக்கும் அநியாயத்தின் புரட்டுகளின் பலன் அல்லது எதிரொலி என்ற முக்கியமான உண்மையை மறைத்துவைப்பது முதலாளித்தன்மை கொண்ட மனப்பான்மையின் குறுகிய நோக்கமேயாகும். புத்தகங்களினாலும், பிரசங்கங்களினாலும், தொழிலாளிகள் உண்மையை உணரமாட்டார்கள். முதலாளித்தனத்தின் இருண்டவலிமையுடன் போர் தொடுக்குங்காலத்தில் ஏற்படும் பிரகாசத்தினால்(வெளிச்சத்தினால்) மட்டுமே உண்மைபுலப்படும். தங்களுடைய விடுதலையின்மூலம்இவ்வுலக அமைப்பைமாற்றி "இந்திர" (சுதந்திர போக போக்கியமுள்ள) லோகமாக ஆக்க முயற்சிக்கும் தொழிலாளர்களுக்குள் ஏற்படும் ஒற்றுமையானது இறந்தபிறகும் "தேவலோகத்தை"ப் பற்றித் தொழிலாளர்கள் நினைக்கும் அபிப்பிராய ஒற்றுமையைவிட மேலானது.

நாம் ஏன் நாஸ்திகர் என்று சொல்லிக்கொள்ளவில்லை?

ஆகையால் தான் நம்முடைய வேலைத் திட்டத்தில் நாம் நம்மை நாஸ்திகர்களென்று வெளிப்படையாய் சொல்லிக்கொள்ளவில்லை,— அப்படிச் சொல்லிக்கொள்ளவுங் கூடாது. ஆகையினால் தான் பழைய மூடக்கொள்கைகளில்பற்றுவைத்திருக்கும் தொழிலாளிகளை நம்முடைய கட்சியில் சேர வேண்டாம் என்று நாம் தடை ஏற்படுத்தவில்லை. விஞ்ஞானஆராய்ச்சியின் மூலம் ஏற்பட்ட அறிவையே நாம் போற்றிவருவோம். கிறிஸ்துவர்களின் முரணான வார்த்தைகளை எதிர்த்து நிற்போம். ஆனால் மதத்தைப்பற்றிய பிரச்னையை எதற்கும் முன்னணியில் இழுத்துப் போட்டுக் கொள்ளவேண்டியதில்லை. பொருளாதாரத் துறையிலும், அரசியல் துறையிலும் புரட்சியுண்டு பண்ணிவரும் சக்திகளைப்பிரித்து வீணாக்கி முக்கியமில்லாததும், அரசியல் துறையில் இடம் பெறாததும் பொருளாதார விருத்தியின் மூலம் தானாக மறைந்து வருவதுமான மதப்பிரச்னைகளுக்குப் பெருமை கொடுக்கவேண்டியதில்லை.

பிற்போக்காளர்களான முதலாளி வர்க்கத்தினர் இங்கும்மற்றவிடங்களிலும் மத வேறுபாடுகளைப் பெரிதாக்கி, ருஷிய மக்கள் ஈடுபட்டிருக்கும் முக்கியமான பொருளாதார அரசியல் புரட்சி இயக்கத்திலிருந்து பொதுஜனங்களின் கவனத்தைத் திருப்பி, மாற்றி விடுகின்றார்கள். தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சக்தியைப்பிரித்துவிடும் இச்சூழ்ச்சியானது இன்று புரட்சி இயக்கத்தில் சேர்ந்தவர்களைக்கொலைசெய்யஏவுகிறது. நாளை இன்னமும் மோசமான வேலைகளில் இறங்கச்செய்யலாம். இவ்விதமான சூழ்ச்சிகளை எதிர்ப்பதற்கு நாம் அமைதியாக சாவதானமாகத் தொழிலாளர்களின் ஒற்றுமையை விருத்தி செய்ய முயற்சித்து விஞ்ஞான (சயின்ஸ்) முடிவின் மூலமாக அறிவைப்பெருக்கியும் அனாவசியமான வித்தியாசங்களை நமக்குள் ஏற்படுத்திக்கொள்ளாமலும் இருக்கவேண்டும். புரட்சியை நடத்தும் தொழிலாளர்கள் மதமென்பது அரசாங்கம் சம்மந்தப்பட்ட வரையில் அவரவர்கள் சொந்த விஷயமாக ஆகிவிடுவதற்கு ஏற்பாடு செய்வார்கள். பிறகு பழைய துருப்பிடித்த பழக்கங்களும், கொள்கைகளும் தானாக மறைந்து மதத்தில் தொழிலாளர்களின் அடிமைத்தனத்தைப் போக்குவதற்குப் பெரும்போர் தொடங்கி, அந்தப் பொருளாதார அடிமைத்தனத்திற்காக ஏற்பட்ட மதமென்ற பித்தலாட்டமானது மனித சமூகத்தைப் பாதிக்காமல் அகற்றப்பட்ட முயலுவார்கள்.

குறிப்பு:—சோஷியலிசம்=சமதர்மம், சோஷியலிஸ்ட் டெமாக்ரசி=சமதர்ம ஜனநாயகம். சையன்ஸ்=விஞ்ஞானம். மெட்டீரியலிசம்= பஞ்சேந்திரியங்களுக்கு எட்டிய பொருள்களே உண்மை. (உலகாயிதம்)

2-ம் அத்தியாயம்.

மதத்தைப்பற்றித்தொழிலாளர் கட்சியின் அபிப்பிராயம்.

(The attitude of the workers towards Religion)

சமதர்ம ஜனநாயகக் கட்சியின் கொள்கை.

சமதர்ம (சோஷியலிஸ்ட்) ஜனநாயகக்கட்சியானது தனது கொள்கைகளை சமதர்மம் (சோஷியலிஸம்) என்னும் விஞ்ஞான முடிவிலிருந்து (சயின்சினிடமிருந்து) பெறுகிறது. அதாவது மார்க்ஸின் போதனைகளிடமிருந்து பெறுகிறது. மார்க்ஸ், ஏஞ்சல்ஸ் ஆகிய இருவரும் தங்களுடைய கொள்கை டைலேட்டிக் மெட்டீரியலிசம் (Dialeatic Materialism) என்பதான—பிரகிருதிப் பொருள்களே உண்மையென்ற தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டது என்று அடிக்கடி சொல்லிவந்திருக்கிறார்கள். இந்த தத்துவமானது 18-வது நூற்றாண்டில் பிரெஞ்சு தேசத்தில் ஏற்பட்ட பிரகிருதவாத இயக்கத்தையும் 19-வது நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜர்மன் தேசத்திலுள்ள பூர்பாக் (Fewrback) என்றவருடைய கொள்கையும் சரித்திர பூர்வமாகத்தழுவியுள்ளது. இக்கொள்கையின் திட்டமானது நாஸ்திகத்தையும், மதத்தை எதிர்க்கவும் போதிப்பதாகும். ஏஞ்சல்ஸ் என்பார் எழுதிய ஆண்டி டேரிங் (Anti-Dubring) என்ற நூலை அச்சிடும் முன்னர் மார்க்ஸ் படித்துப் பார்த்தார். அந்நூலில் டேரிங் என்பார் தன்னை ஓர் பிரகிருதிவாதியென்றும், நாஸ்திகர் என்றும் சொல்லிக்கொண்ட போதிலும், மதத்திற்கும், மதக்கொள்கைகளுக்கும் இடங்கொடுத்திருப்பதற்காக அவரைக் கண்டிக்கப்பட்டிருக்கிறது. லூடிங் பூர்பாக் (Luding Fewrback) என்பவரைப்பற்றி ஏஞ்சல் எழுதிய கட்டுரையில் பூர்பாக் மதத்துடன் சண்டையிடுவதின் நோக்கம் மதத்தை ஒழிப்பதற்கல்லவென்றும் மதத்தைத் தூய்மைப்படுத்துவதற்கே யென்றும் கூறியிருக்கிறார். "மதம் மக்களுக்கு அபினி (போதை) கொடுப்பது" என்பது மார்க்ஸின் கூற்று. இக்கொள்கையே மார்க்ஸ் சித்தாந்தக்காரருடைய கொள்கைக்கு அடிப்படையாகும். தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் பல்வேறு மதங்களும், மதஸ்தாபனங்களும், மதச்சங்கங்களும் முதலாளி வர்க்கத்தின் ஆட்சிக்கு ஆயுதங்கள் என்பதும் அவைகளின் நோக்கம் பொதுமக்களை மயக்கத்தில் ஆழ்த்தி அவர்களை ஆளும் முதலாளி கூட்டத்திற்கு உதவி செய்வதென்பதும் மார்க்ஸினுடைய கொள்கையாகும்.

எஞ்சல்சின் கண்டனை.

ஆனால் அதே சமயத்தில் சோஷியலிஸ்ட் ஜனநாயகக்கட்சியில் தாங்கள் அமிதவாதிகளெனக்கூறிக்கொண்டு தொழிலாளர் கட்சியின் வேலைத்திட்டத்தில் நாஸ்திகப்பிரசாரத்தைப் புகுத்த முயன்று மதத்தோடு யுத்தம் புரிவோம் என்று பறை சாற்றுவோரை எஞ்சல்ஸ் அடிக்கடி கண்டித்து வந்தார்.

1874 ம் வருஷத்தில் பிளாங்கிஸ்ட் Blanguist என்ற கம்யூன் Commune கூட்டத்தைச்சேர்ந்த அக்காலம் லண்டனில் குடியேறியிருந்தவர்கள் விடுத்த அறிக்கையில் மதத்துடன் யுத்தம் தொடங்குவோம் என்று பறை சாற்றியிருந்ததை எஞ்சல்ஸ் முட்டாள்தனமெனக்கண்டித்து, அம்மாதிரி யுத்தம் தொடங்குவதின் மூலம் பொது மக்கள் நாளடைவில் மறந்துவரும் மதத்தில் புதிதாய் ருசி காண்பித்து இறக்கும் தருவாயில் இருக்கும் மதத்திற்கு புத்துயிர் அளிப்பதாகும் என்று விளக்கிக்காண்பித்தார். தொழிலாளர் தங்கள் கூட்ட மக்கள் சகலரையும் ஒருங்கே திரட்டி தங்களுடைய விடுதலைக்கு நடத்தும் புரட்சிப்போர் முனையின் நடவடிக்கையில் மாத்திரமே கொடுமைப்படுத்தி தாழ்த்திவைக்கப்பட்ட மக்கள் மதம் என்னும் அடிமை விலங்கை அறுத்தெறிய சாத்தியப்படுமே ஒழிய சாதாரண காலத்தில் தொழிலாளர் கட்சியின் அரசியல் நோக்கங்களில் ஒன்றாக மதத்துடன் யுத்தம் தொடங்குவது உருப்பட முடியாத வீண் டம்பம் என்பதை உணரவில்லை என்று பிளாங்கு விட்ஸ் Commune கூட்டத்தாரை எஞ்சல்ஸ் கண்டித்திருக்கிறார்.

டூரிங்குக்கு மறுப்பு.

1877ம் வருஷத்தில் ஆண்டி டூரிங் Anti Duhring என்ற புத்தகத்தில் மதத்திற்கும், பாரமார்த்திக கொள்கைக்கும் இடம் கொடுத்ததற்காக டூரிங்கை கண்டித்ததோடு தன்னைப் புரட்சிக்காரனாக பாசாங்கு செய்துகொண்டு சோஷியலிசம் வெற்றிபெற்ற காலத்தில் சமூகத்தில் மதத்தை சட்ட விரோதமென ஒரே அடியாய் ஒழித்து விடுவோமெனக் கூறியதையும் அழுத்தமாய்க் கண்டித்தார். மேலும் மதத்துடன் யுத்தம் தொடங்குவது பிஸ்மார்க் செய்த தவறை மிகைப்படுத்திச் செய்வதாகும் என்று எஞ்சல்ஸ் கூறினார்.

1870ம் வருஷத்தில் ஜர்மனியில் ஏற்பட்டிருந்த கத்தோலிக் மதக்கட்சிக்கு விரோதமாய் பிஸ்மார்க்கு யுத்தம் தொடங்கி அறிவு விர்த்தி சங்கங்கள் Culture Camps ஏற்படுத்தி கத்தோலிக் பாதிரிகளை அறைகூவி அழைத்தார். இந்த யுத்தத்தின் பயனாய் கத்தோலிக் பாதிரிகளின் ஆட்சி வலிமையுற்று மக்களின் அறிவு வளர்ச்சி குன்றியது. ஏனென்றால் அந்த யுத்தத்தின் உண்மைப் பயன் அரசியல் கொடுமைகள் ஜனங்களுடைய கண்களுக்குத் தென்படாமல் மறைவுற்று போலிமத வித்தியாசங்கள் மிகைப்படுத்திக் காணப்பட்டன. ஆகையினால் தொழிலாளர்களுடையவும், பொது ஜனங்களுடையவும் கவனிப்பெல்லாம் தொழிலாளர் விடுதலை யுத்தத்தினின்றும் புரட்சிப் போரினின்றும் இழுக்கப்பட்டு முதலாளிகள் தந்திரமாய் பாதிரிகள் பேரில் தொடங்கிய போலி யுத்தத்தில் செலுத்தப்பட்டு வியர்த்தமுமாயின.

அமிதவாதப் புரட்சிக்காரனென்று சொல்லிக்கொண்ட டூரிங் ஏற்கனவே பிஸ்மார்க்கு செய்த தவறுதலை திருப்பிச் செய்வதாக எஞ்சல்ஸ் குற்றங்கூறினார். தொழிலாளர் கட்சி தன்னுடைய முக்கிய வேலையாகிய தொழிலாளர் கூட்டத்தைத் திரட்டி விஷயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாய் எடுத்துச்சொல்லிப்படிப்பிப்பதன் மூலம் மதம் தானாக மறைந்து போகவேண்டுமே தவிர வீணாக மதத்தின் பேரில் அரசியல் போர் தொடங்கக்கூடாதென எஞ்சல்ஸ் கூறியிருக்கிறார். (தொடரும்)

ANANGARANGABATIKA.
(Enjoyment Pill)
DIVINE REMEDY FOR SEXUAL DISABILITY and IMPOTENCY-Restore youthful Retaintive & Erective Capacity ENSURE PLEASURE FOR ONE HOUR. Even an OLD one can fully enjoy the HEAVENLY BLISS derived From Sexual intercourse.
Complete satisfaction guarenteed. Money refunded in case of tailure. Price for 60 Pills Rs. 8. Sample phial of 20 Pills Rs. 3 only. Please write in ENGLISH.
"SAILASRAM" (K)
Chandanpur,
(Khulna) E. B. R.

இதுதானே தேவை!
இல்லற சுகத்தை யடையச்செய்ய ஏதுவான தாதுபுஷ்டியை அளிக்கும் மாத்திரை.
இணையற்ற மாத்திரையென யாவராலும் புகழப்பெற்று எண்ணிக்கையிலா ஆர்டர்கள் வந்துகொண்டிருக்கும் ஒப்புயர்வற்றது. மாதர்கள் மனதை திருப்தி பண்ணும் மாண்பு வாய்ந்த தென்றால் இதைப்பற்றி அதிகம் விளக்குவானேன்!
இது மேகச்சூடு, வெட்டை, ஆண்மைக்குறைவு, வீரியக்குறைவு, நரம்புத்தளர்ச்சி, சோகம் துவளல், இளைப்பு, தாகம் முதலியவைகளை நீக்கி வீரிய விருத்தி, போகசக்தி, இந்திரியக்கட்டு முதலியவைகளைகொடுக்கும். குளிகை 20 ரூ. 2—0—0. (தபால் சார்ஜ் வேறு)
மலையப்பசாமி, வைத்தியசாலை, பழனி. S. I.

சாலாமிசிரி லேகியம்
(ரிஜிஸ்டர்டு)
சிறந்த தாதுபுஷ்டி மருந்து.
மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.
இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்
சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.
ஆண் தன்மையை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.
ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,
1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை
டி. சி. சிங்காரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.
கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அறிய நூல். டிம்மி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணா. 0—6—0
நாஸ்திகன்
C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. மாதர் சுதந்தரம or பெண்மக்கள் பெருமை 0—8—0
5. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
6. சுயமரியாதை தத்துவ கீதங்கள் ... 0—4—0
7. சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0
8. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0
The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 6 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

Goshaye office pillss.
கோஷாயி ஆபீஸ் மாத்திரை


Dr. T.K.V. Chalam.

மலச்சிக்கலுள்ள ஆண், பெண், பாலர், விருத்தர்களும் எவ்வித பத்தியமுமில்லாமல் சாப்பிட்டு குணமாகக்கூடிய கோஷாயி ஆபீஸ்மாத்திரை 51 கொண்ட சீசா 1க்கு ரூ. 1—10—0 101-க்கு 3—0—0. வி. பி. பாக்கிங் சார்ஜ் வேறு.

Proprietor. T. K. வெங்கடாசலம்,
(Disciple of Late Dr B. A. Ehiraj Cholera Bairi)
கோஷாயி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

மதத்தை ஒழிப்பது உயர்வு தாழ்வை ஒழிப்பதாகும்.

"SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.
Price annas. 0-2-0

ரூபா 3-6-0 க்கு 3-கடிகாரங்களும் இதர வெகுமதிகளும்.

சந்தேகமில்லை, ஆச்சரியமில்லை, உண்மை!

ஆட்டோ சுகந்தராஜ் (இந்து பூத்த புஷ்பங்களின் சத்து) மணம் மிகுந்தது. 3-நாள் உபயோகத்துக்குரிய புட்டி 3-அணா. படைமருந்து 12 மணி நேரத்தில் பரிபூரண குணம் டப்பி 1-க்கு 3 அணா. மேற்படி 2-தினுசுகளும் சேர்ந்தாவது தனித் தனியாவது 18-புட்டிகள் ரூபா 3-6-0 க்கு ஆர்டர் செய்தால், கோல்ட் நிப் பௌண்டன் பேனா 1. 500-கஜம் வரை வெளிச்சம்தரும் பாட்டரி லாம்ப் 1, நூதன கைக்கெடியாரம் 1, பர்மா டைம்பீஸ் அல்லது ரயில்வே மெயில்காட் லீவர் பாக்கெட்வாச் 1-ம், இனாமாக அனுப்பப்படும். ஒவ்வொரு கடிகாரமும் 10 வருடம் உத்தரவாதம். சாமான்கள் பிடித்தமில்லாவிடில் பணம் திருப்பிக்கொடுக்கப் படும். பாக்கிங் தபால் செலவு தனி.



விலாசம்:—Sharma Brothers & Co.,
Post Box No. 2412, Section 9C,
Calcutta.

தமிழ் நாட்டு பெற்றோர்களே!

முந்துங்கள்! முந்துங்கள்!!

மெட்ரிக்குலேஷன்

அறிவை

தங்கள் பிள்ளைகள் நேரில் படித்துப் பெற சந்தர்ப்பமில்லாவிடின் தொழில் செய்து கொண்டே தபால் மூலம் ஸ்பெஷல் மெட்ரிக்கோர்ஸ்களை வாசித்து முடிக்கலாம். இஸ்டப்படின் சர்க்கார் கே. சீனியர் பாஸாகி காலேஜில் சேரலாம். லோயர், ஹையர் கிரேட் உபாத்தியாயர்கள், S. S. L. C. தவறியவர்களுக்கு அதிக பிரயோஜனமானது. நமது மாணவர்களின் வெற்றி K. சீனிவாசகன் (ஹையர் கிரேட்) IV பாரம் படித்தவர்கடந்த கே. சீனியர் பாஸ் செய்து சக்கண்டரியாக மாறப்போகிறார். Dr. H S. சுப்பரமணியம் 4 மாதங்களில் படித்து பாசாகி கடைசி 2 வருஷ M. B. B S. படிக்கிறார் மற்ற விபரத்திற்கு உடன் எழுதவும்.

டைரக்டர்,

அன்டையன்ஸ் கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
(தலைமை ஆபீஸ்) ஆறுமுகநேரி S. I. R.

கடவுள் உணர்ச்சியை ஒழிப்பது பணக்காரத்தன்மையை ஒழிப்பதாகும்.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப் படிப்பதால் அனேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச்சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரத்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0 8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0

மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

கதர்-மூடநம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர், நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.